பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 18 செவ்வாய்க்கிழமை (01-04-2003) UTHAYAN - A Lively National Tamil Daily சுடர்: 126

# துருப்பினரை ஏற்றிச் சென்ற கப்பல் மீது துப்பாக்கிச் சூடு!

## திருமலைக் கடலில் நேற்றிரவு சம்பவம்; 3 சிப்பாய்கள் காயம்

கொழும்பு,ஏப்.1

...டுமுறையில் சென்றுவிட்டு பணிக்குத் திரும்பிய சுமார் 1000 துருப்புக்களுடன் திருகோணமலையில் ...ந்து புறப்பட்டு வடக்கே சென்று ...ண்டிருந்த 'லங்கா முடித்த' கப்பல் ...இனந்தெரியாத படகு ஒன்றில் ...ந்து நேற்றிரவு துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அதில் கப்பலில் இருந்த 3 சிப்பாய்கள் காயமடைந்தனர்.

படையினர் திருப்பித் தாக்கியதில் அந்தப் படகு அதில் இருந்த ஆள்களுடன் மூழ்கடிக்கப்பட்டது.

பாதுகாப்பு வட்டாரங்கள் இவ்வாறு தகவல் வெளியிட்டன. திருகோணமலைக்கு கிழக்கே 20 கடல்மைலில் தொலைவில் நேற்றிரவு 9 மணிக்கு இச்சம்பவம் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கண்காணிப்புக் குழுவுக்கும் உடனடியாக அறிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் படுகாயமுற்ற இரு சிப்பாய்கள் உடனடியாக கப்பலில் இருந்து சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டனர். மூன்றாவது சிப்பாய் சிறிய காயத்திற்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டது.

"தாக்குதல் நடத்திய படகு வழமையாக புலிகள் பயன்படுத்துவது போன்ற ஒன்றல்ல" என்று வடபகுதி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் ஆதரவாளர் வீடு மீது கிரனேட் தாக்கு!

மட்டக்களப்பு,ஏப்.1

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளரின் வீடொன்றின் மீது நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் மட்டக்களப்பு சுகாதார தபாலக சிற்றூழியரான க.யோகப்பிள்ளை என்பவரும் அவரது மனைவியும் படுகாயமடைந்தனர். இவர்கள் இருவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இணக்க சபைத் தலைவரான யோகப்பிள்ளை விடுதலைப் புலிகளின் நீண்டகால ஆதரவாளர் என்று கூறப்பட்டது. (ம-4)

# யாழ்.நகரில் புதிய படைத்தளம்: புலிகள் உத்தியோகபூர்வ எதிர்ப்பு

## பாதுகாப்பு அமைச்சருக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்

கிளிநொச்சி,ஏப்ரல்1

யாழ்.சுபாஸ் மற்றும் ஞானம்ஸ் ஹோட்டல்களில் அமைந்துள்ள பிரிகேட் தலைமையகத்தை யாழ்.கோட்டைக்கு அருகே மீளமைக்கும் அரசின் முடிவுக்கு விடுதலைப் புலிகள் உத்தியோகபூர்வமாகக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாகப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர், சு.ப. தமிழ்ச்செல்வன், இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு நேற்று ஆட்சேபக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருக்கின்றார்.

இந்த ஆட்சேபக் கடிதத்தின் பிரதி ...ர் கண்காணிப்புக் குழுவுக்கும், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர், ...கை அரசின் சமாதானச் செயல...செயலாளர் நாயகம் பேர்னாட் ...லக ஆகியோருக்கும் அனுப்பி...ப்பட்டுள்ளன.

அந்தக் கடிதத்தில் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தெரிவித்திருப்பதாவது:-

யாழ்ப்பாணம் ஞானம்ஸ் மற்றும் சுபாஸ் ஹோட்டல்களில் உள்ள பிரிகேட் தலைமையகத்தை முன்னாள் யாழ்நகர மண்டபம், யாழ்மாநகர சபை அலுவலகம், யாழ்வாடிவீடு, பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றுக்குரிய காணிகளையும் யாழ்கோட்டை மற்றும் சுற்றுப் புறங்களையும் ஒன்றிணைத்த யாழ்.மாநகர சபைப் பிரதேசத்துக்கு இடம்மாற்ற தங்களின் அரசு தீர்மானித்...

(14ஆம் பக்கம் பார்க்க)



மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் பகுதியில் நேற்று மின்சார விநியோகத்தை அமைச்சர்களான கருஜயசூரிய, காமினிலொக்குகே, பி.தயாரட்ண ஆகியோர் ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.



# வீரப்பனும் ஏழு சகாக்களும் தலைமன்னார் கடலில் கைது!

கடத்தல்காரன் வீரப்பன் உட்பட அவனது சகாக்கள் 7 பேர் நேற்று முன்னிரவு கைதுசெய்யப்பட்டனர். தலைமன்னார் கடல் பகுதியிலேயே இது நடந்தது.

நேற்று மாலை தொழிலுக்குச் சென்ற இலங்கை மீனவர்களே இவர்களைப் பிடித்தனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

திருமங்கலம் காட்டுப்பகுதியில் வீரப்பன் ஒளிந்திருந்த குகைப்பகுதியை தமிழ்நாடு அதிரடிப்படையினர் நெருங்கவே திக்குத் திசைமாறித் தப்பியோடிய வீரப்பன் கோஷ்டியினர் மலைக் கிராமவாசிகளின் உதவியுடன் கரையோரப் பகுதிக்குள் ஊடுருவினர்.

பின்னர் மீனவக்குடும்பம் ஒன்றின் உதவியுடன் கரையோரப் பகுதிக்கு வந்தனர் எனவும் பொலீஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடல்பாதை பற்றிச் சரியாகத் தெரியாமல் படகில் தீவட்டியுடன் கடலில அலைந்து கொண்டிருந்தபோதே இந்தக் கோஷ்டியினரைத் தாம் கண்டதாகவும் நண்பர்கள் போல நைஸாகப் பேசிப் பிடித்ததாகவும் மீனவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

கைது செய்யும்போது வீரப்பன் கோஷ்டியினரிடம் நான்கு குழல் துப்பாக்கிகளும், நான்கு லட்சம் ரூபா இந்திய நாணயத் தாள்களும் இருந்துள்ளன.

# புலிகள் சமாதானப் பேச்சை குழப்ப முயற்சிக்கவில்லை

## நிரந்தர சமாதானத்துக்கு உதவ பிரதமர் கோரிக்கை

வெற்றிகாண முடியாத ஒரு யுத்தத்திற்கு இளைஞர்களைப் பலிகொடுக்க ஒருபோதும் தயாரில்லை என்றும் இன்றைய சமாதான முயற்சியை நிரந்தரமாக்க முடியும் என்பதில் அரசு பூரண நம்பிக்கை கொண்டிருக்கிறது என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

மாத்தறையில் ஞாயிறன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் இவற்றைக்கூறிய பிரதமர், சமாதான முயற்சியைக் குழப்ப விடுதலைப் புலிகள் முயற்சிக்கவில்லை எனவும் சொன்னார்.

பிரதமர் தொடர்ந்து உரையாற்றியதாவது:-

அண்மையில் முல்லைத்தீவுக் கடலில் தாக்குதல் ஒன்றில் புலிகள் கப்...

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஆனந்தசங்கரியின் கருத்துக்கு கிழக்குப் பல்கலையில் எதிர்ப்பு

## கொடும்பாவியும் எரிப்பு

மட்டக்களப்பு,ஏப்.1

விடுதலைப் புலிகள் தமிழ்மக்களின் ... பிரதிநிதிகள் அல்லர் என்று ...ர் விடுதலைக் கூட்டணியின் ...வர் வீ.ஆனந்தசங்கரி கருத்துத...வித்ததைக் கண்டித்து கிழக்குப் ...கலைக்கழகத்தில் நேற்று நண்பகல் ...ர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்தப் போராட்டத்தில் அனைத்துப்பீட மாணவர்கள், விரிவுரையாளர்கள், துறைசார் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

பெரும் எண்ணிக்கையானோர் பங்குகொண்ட இந்தப் போராட்டத்தின் இறுதியில் ஆனந்தசங்கரியின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# யார் ஆட்சிபீடம் ஏறினாலும் அமைதி முயற்சி தொடரும்

## இராஜதந்திரிகள் மத்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.1

"யார் ஆட்சி பீடத்தில் இருந்தாலும் அமைதித் தீர்விற்கான நடவடிக்கைகள் நிறுத்தப்படாமல் தொடரும்.

'நாட்டின் தலைவி என்ற முறையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை சேர்ந்தவர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் உட்பட இந்த நாட்டின் சகல மக்களுக்கும் இந்த உறுதிமொழியை நான் வழங்குகின்றேன். இவ்வாறு அறிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகள் மத்தியில் நேற்று உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# புலிகள்தான் ஏகப்பிரதிநிதிகள் என்று கூறும் தகுதி ஈ‑ரோஸ் தலைவர் பாலகுமாருக்கே உண்டு

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று கூறுகின்ற உரிமை ஒருவருக்குத்தான் உண்டு. அவர் ஈரோஸ் பாலகுமார். அவர்தான் விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு தனது இயக்கத்தை முடக்கி வைத்துவிட்டு, விடுதலைப் புலிகளின் அங்கமாக இணைந்துகொண்டு அவர்களுடன் இயங்கி வருபவர்.

ஆனால், அவர் ஒருவர்தான் அந்த உரிமையும் தகுதியும் பெற்றிருக்கிறார். இந்த விடயத்தில் (விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதிகள் என்று நாம் ஒருபோதும் கூறவில்லை என்று நான் தெரிவித்ததற்காக) என்னை விமர்சித்து அறிக்கை விடுபவர்கள் பாலகுமாரை முன்னுதாரணமாகக் கொண்டு செயற்பட முன்வருவார்களா என்று அறிக்கை ஒன்றில் கேள்வி எழுப்பியிருக்கிறார் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பியுமான ஆனந்தசங்கரி.

ஆனந்தசங்கரி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

'விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் இல்லை.' என்று நான் கூறியதாக உருவாகியிருக்கும் சர்ச்சைக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைக்குமாறு மிகப் பணிவாக வேண்டுகின்றேன். யார், யாரோ எல்லாம் அறிக்கை விடுவதும், சிலர் தங்களை பெரும் உத்தமர்கள்போல் காட்டிக்கொண்டு என்னைப் பற்றி நியாயமற்ற முறையில் பத்திரிகைகளில் விமர்சிப்பதும் வேதனை தருகின்றது.

நான் நாடாளுமன்ற ஆசனத்தை வெறும் சம்பிரதாயமாகப் பயன்படுத்தவில்லை. விடுதலைப் புலிகளின் தடையை நீக்குங்கள் என்று எத்தனை தடவை நாடாளுமன்றத்திலும், வெளியிலும் வலியுறுத்திப் பேசினேன். ஒரு தடவை நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சரைப் பார்த்து "பளைப் பிரதேசத்தை 10ஆண்டுகள் சென்றாலும் உங்களால் மீளப் பிடிக்க முடியாது" என்றும் "ஆனையிறவைப் பிடிப்பது வெறும் பகற்கனவு" என்றும் கூறியுள்ளேன். இன்னொரு தடவை பாதுகாப்பு அமைச்சரை நேரடியாகவே சபையில் வைத்து "35 ஆயிரம் இராணுவத்தினரின் உயிரைக் காப்பாற்றித் தாருங்கள் என்று வெளிநாட்டு அரசுகளை மீண்டும் மண்டியிட்டு கேட்கவேண்டிய சந்தர்ப்பம் வராது என எண்ணாதீர்கள்" என்று இப்படி எத்தனையோ தடவைகள் விடுதலைப் புலிகளின் சார்பில் தனித்து நின்று பேசியுள்ளேன்.

மேலும் நாடாளுமன்றில் பார்வையாளராக வருகை தந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அவர்களை சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரத்ன மிக மோசமாக விமர்சித்த பொழுது ஆளுங்கட்சியிலும் சரி எதிர்க்கட்சியிலும் சரி உறுப்பினர்கள் பேசாதிருந்ததை நானே எழுந்து நாட்டு மக்கள் சார்பில் மன்னிப்பு கேட்டதுடன் அவரது பணிகளின் அவசியத்தையும் சமாதானத்தின் தேவையையும் வலியுறுத்திப் பேசினேன். அதற்காக சிங்கள இனவாதிகளிடம் அன்றிரவு முழுவதும் வாங்கிக் கட்டியதை நினைவு கூருவது இப்போது பொருத்தமானதாகும்.

எரிக்சொல்ஹெய்ம் அவர்களை நான் நோர்வேயில் தனியச் சந்தித்துப் பேசியபொழுது, நான் விடுதலைப் புலிகள் குறித்து என்ன பேசினேன் என்பதை அவரிடமே கேட்டு அறிந்துகொள்வது நல்லது. இவற்றை யாராலும் மறுக்கமுடியாது. இவையெல்லாம் எனது பிதற்றலா? உளறலா? அல்லது தங்களைப் பெரும் உத்தமர்கள் என்று கூறிக்கொண்டு எனது வார்த்தைகளை உளுத்துப்போன அரசியல் என்று கூறுவதுபோல உளுத்துப்போன வார்த்தைகளா?

நான் விடுதலைப் புலிகளின் தியாகத்தையும் அர்ப்பணிப்புக்களையும் மதிக்கின்றேன். எமது கட்சிக்கு ஏற்பட்ட கசப்பான சில அனுபவங்களை எல்லாம் மறந்து தமிழ் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, களத்தில் நின்று போராடி தியாகங்கள் செய்த தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டும்தான் பேச்சு நடத்த வேண்டும் என்பதில் நாம் மிக உறுதியாக இருக்கின்றோம். இதுதான் தேர்தலுக்கு முன்பு நாம் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம். கூட்டமைப்பிலுள்ள நாலு கட்சிகளின் கூட்டணி தவிர்ந்த மூன்று கட்சிகள் தாம் கையெழுத்திட்ட தேசியப் பட்டியல் ஒப்பந்தத்தை அறியாது பிதற்றியது போலவே தற்போதும் நாம் கையெழுத்திட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதை அறியாது கருத்துக் கூறுகிறார்கள்.

விடுதலைப் புலிகளும் அரசும் இனப்பிரசச்சினை சம்பந்தமாகப் பேச்சு நடத்திக்கொண்டிருக்கும் இவ்வேளையில், அம்முயற்சிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி எதுவித இடைஞ்சல்களையோ முட்டுக்கட்டைகளையோ போடாமல் அவர்களுக்கு ஓர் உந்துசக்தியாக இருந்து பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்பதை மீண்டும் வலியுறுத்தி இப்பிரச்சினைக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைக்கவும் விரும்புகின்றேன் - என்றுள்ளது. (ம)

## பெண்கள் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல்

கொடிகாமம்,ஏப்.1

அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயம் யாழ் சமூக செயற்பாட்டுமையம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கச்சாய் பெண்கள் அபிவிருத்தி சங்கப் பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளனர்.

இச்சந்திப்பு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30மணிக்கு கைதடி பெண்கள் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கச்சாய்ப் பகுதியில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதே இக்கலந்துரையாடலின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-74)

## புலிகளின் தலைவரை ஹக்கீம் சந்திப்பார்

கொழும்பு,ஏப்.1

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்துகொள்வது தொடர்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு மீண்டும் வரும்போது இச்சந்திப்பு இடம்பெறுமென முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## மனைவியைத் தாக்கிய நபருக்கு 6 மாதகால சிறைத் தண்டனை

மனைவியைக் கண்டபடி தாக்கியதாகத் தெரிவித்துப் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட நபருக்கு யாழ். நீதிமன்றம் 6மாத கால கடுழிய சிறைத் தண்டனை விதித்துள்ளது.

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாக்கியநாதன் விஷ்ணு காந்தன் என்பவருக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா இத்தண்டனையை விதித்தார்.

இதேவேளை -

சட்டவிரோதமாக கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த செல்வராஜா அஜிந்தராஜ் என்பவருக்கு 2ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் செலுத்துமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.(எ-8)

## அமைதி முயற்சி முன்னேற்றம் காணும் சமயம் குந்தகக் கருத்துகளை வெளியிடவேண்டாம்!

### அரசியல் தலைவர்களுக்கு மாவை வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஏப்.1

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் வெற்றி இலக்கை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் அந்த சமைய முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக் கக்கூடிய வகையில் அரசியல் தலைவர்கள் கருத்து வெளியிடுவதோ அன்றி விடுதலைப் புலிகளின் உரிமைப் போராட்டம் தொடர்பாக தவறான கருத்துகளை முன்வைப்பதோ ஏற்புடையதன்று.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

தந்தை செல்வாவின் 105ஆவது பிறந்தநாள் நினைவு நிகழ்வுகள் நேற்று யாழ்.முற்றவெளியில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு தலைமையுரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாவை எம்.பி.தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தேர்தலில் வெற்றி பெறுவதற்காகவோ அன்றி எதையும் நியாயப்படுத்துவதற்காகவோ உருவாக்கப்பட்டதன்று. இதன் உருவாக்கத்துக்கென அடிப்படையான காரணங்களேயுள்ளன.

தமிழ் மக்களின் விடுதலைக்காக நடத்தப்பட்ட உரிமைப் போராட்டத்தை இலங்கை அரசும், சர்வதேசமும் 'பயங்கரவாதம்' என முத்திரை குத்தி விடுதலைப் புலிகளின் பலத்தை நசுக்க முற்பட்டன.

அது மட்டுமல்லாது, பேரினவாத அரசும், அவர்களின் கைக்கூலிகளாகச் செயற்பட்ட ஈ.பி.டி.பியும் தமிழ் மக்களை விற்கும் ஈனச்செயலை மேற்கொண்டபோது, அவர்களின் அடாவடித்தனங்களைத் தடுத்து நிறுத்த வேண்டிய தேவை தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஏற்பட்டது. அதன் பின்னணியில், காலத்தின் தேவைகருதி நான்கு தமிழ்க் கட்சிகள் இணைந்து உருவாக்கப்பட்டதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகும்.

இவற்றினைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள சகல அரசியல் தலைவர்களும் நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும். அதனைவிடுத்து தான்தோன்றித்தனமாக கருத்துக்களை முன்வைப்பதானது ஒட்டுமொத்தமாக எமது மக்களை மட்டுமல்லாது சர்வதேச சமூகத்தையும் குழப்பத்தில் ஆழ்த்திவிடும்.

சமாதானச் சூழல் நிலவுகின்ற இந்தநாள் மிகவும் முக்கியமானது. போராட்டப் பாதையிலே பல மாற்றங்களைச் செய்யவேண்டியுள்ளது. விடுதலைப் புலிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான புரிந்துணர்வை மேலும் பலமடையச் செய்து எமது ஒற்றுமையைச் சர்வதேசத்திற்கு காட்டவேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. அதனை நிறைவேற்றுவதற்கு கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தத்தமது பங்களிப்பை வழங்கவேண்டும்.

தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையை இன்றைய அரசு ஏற்றுக்கொண்டுள்ளதுடன் அவர்களின் பிரச்சினைகளுக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இது பாராட்டப்பட வேண்டியதாகும்.

எனினும், புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் வகையில் படையினர் புதிது புதிதாக இராணுவ முகாம்களை அமைத்து வருகின்றனர். இந்தவகையில் யாழ்குடாநாட்டின் இதயப் பகுதியாக விளங்கும் மாநகர சபை வளாகத்திற்குச் சொந்தமான பகுதியில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பாரிய இராணுவ முகாம் அமைக்கப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழ்மக்களை அடக்க, ஆள நினைக்கும் இராணுவத்தின் இத்தகைய முயற்சியைத் தடுக்கும் வகையில் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் விரைவில் பிரதமரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம்.

அக்கலந்துரையாடலின் உடனடியாக உயர் பாதுகாப்பு வலயம் அகற்றப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடமளிக்கவேண்டும் என்றும் -

அதுமட்டுமல்லாது இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் சென்று மீளக்குடியமரவும், மீனவர்கள் கடலில் சென்று சுதந்திரமாக தொழிலில் ஈடுபடவும் இடமளிக்கவேண்டும் என்றும் -

பிரதமரை வலியுறுத்திக் கேட்க உள்ளோம்.

யாழ்நகரப் பகுதியில் புதிதாக இராணுவ முகாம் அமைக்கப்படுவதற்கு எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன்னர் தீர்வு காணப்படாதுவிடில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குடாநாட்டிலுள்ள அனைத்துப் பொது அமைப்புகளையும் ஒன்றிணைத்து எதிர்ப்புப் போராட்டம் நடத்தும் நிலை ஏற்படலாம் - என்றார்.

அருட்தந்தை ஆம்ஸ்ரோங் அடிகளார், பேராசிரியர் சி.சிற்றம்பலம், தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர் சீ.வி.கே.சிவஞானம் உட்பட பலரும் உரை நிகழ்த்தினர். (எ-5)

## நகரில் மீண்டும் நடைபாதை வியாபாரம் போக்குவரத்து நெருக்கடி ஏற்படும் அபாயம்!

யாழ்ப்பாணம்,ஏப்.1

யாழ்.நகரின் முக்கிய வீதிகளில் மீண்டும் நடைபாதையோர வியாபாரம் சூடுபிடித்துள்ளது இதனால், நகரப் பகுதியில் பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

யாழ்நகரப் பகுதியில் உள்ள முக்கிய வீதிகளான ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி போன்றவற்றிலும், யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாகவும் இந்த வியாபார நடவடிக்கைகள் மீண்டும் முளைகொண்டுள்ளன.

குறிப்பாக புடைவை வியாபாரிகள், அப்பிள் வியாபாரிகள் தமது பொருள்களைப் பரப்பி வைத்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

நகரப் பகுதியில் வாகனப் போக்குவரத்து அதிகரித்துள்ள இன்றைய நிலையில் தற்போது சூடுபிடித்திருக்கும் நடைபாதையோர வியாபாரம் போக்குவரத்து நெரிசலை மேலும் அதிகரிதுள்ளது.

குறிப்பாக, யாழ்.பஸ் நிலையத்திற்கு முன்னால் மேற்குப் பக்கமாக அப்பிள் வியாபாரிகள் பலர் அப்பிள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கொழும்பு செல்லும் வாகனங்கள் மற்றும் தனியார் பஸ்களும் அப் பகுதிகளில் தரித்து நின்று பயணிகளை ஏற்றுவதால் இப்பகுதியில் சன நெரிசல் ஏற்பட்டுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நடைபாதையோர வியாபாரிகள் அனைவரும் நகரப் பகுதியில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு முனீஸ்வரன் வீதியில் நடைபாதையோர வியாபாரத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் வியாபாரத்தில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர்.

இதன்மூலம் சில காலமாக நகரின் போக்குவரத்து நெரிசல் குறைந்திருந்தது. எனினும், சில வியாபாரிகளின் அத்து மீறிய நடவடிக்கைகளினால் மீண்டும் போக்குவரத்து நெருக்கடி ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன எனச் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக இது விடயத்தில் செயற்பட்டு யாழ்நகர வீதிகளில் உள்ள நடைபாதை வியாபாரக் கடைகளை முழுமையாக அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (எ-8)

## மகளிர் குழுவின் கல்விச்சுற்றுலா

யாழ்ப்பாணம்,ஏப்.1

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தின் மகளிர் குழுவொன்று கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு நாளை புதன்கிழமை தென் பகுதிக்குச் செல்லவுள்ளது.

உலக வங்கியின் அதிகாரிகள் குழு அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தபொழுது மேற்படி குடியேற்றத்திட்ட மகளிர் குழுவினர் அவர்களைச் சந்தித்து தமது சுற்றுலாத் தொடர்பாகத் தெரிவித்ததை அடுத்து உலக வங்கி இதற்கான அனுசரணையை வழங்கியுள்ளது. நாளை செல்லவுள்ள மகளிர் குழுவினர் எதிர்வரும் 6ஆம் திகதி இங்கு திரும்பவுள்ளனர். (ஒ-10)

## அம்பாறை நகரில் ஆறு கடைகளில் ஆயுதம் தாங்கிய குழு கொள்ளை!

கொழும்பு,ஏப்.1

அம்பாறை நகரிலுள்ள ஆறு கடைகள் நேற்றுமுன்தினம் இரவு தாக்கப்பட்டன. ஆயுதம் தாங்கிய ஒருகுழுவினர் கடைகளை உடைத்து பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இரண்டு மதுபான விற்பனை நிலையங்கள், இரண்டு கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையங்கள், மொத்த விற்பனை நிலையம் ஒன்று, மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் விற்பனைக்கடை ஒன்று என்பனவே கொள்ளையிடப்பட்டன என்று அம்பாறை பொலீஸார் தெரிவித்தனர்.

மதுபான விற்பனை நிலையங்களிலிருந்து 3 லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றது. ஏனைய கடைகளில் கொள்ளையடிக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பது உடனடியாகக் கண்டறியப்படவில்லை. அம்பாறைப் பொலீஸார் இதுகுறித்து விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.1

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் 2001, 2002ஆம் ஆண்டு கணனிப் பிரிவு மாணவர்களின் சான்றிதழ் வழங்கும் வைபவம் தொடர்பான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது என்றும் -

அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் - கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (எ)

## புலிகளின் பகுதிகளுக்கு 3 அமைச்சர்கள் விஜயம்

மட்டக்களப்பு,ஏப்.1

அமைச்சர்களான கருஜயசூரிய, காமினி லொக்குகே, தயாரத்ன ஆகியோர் நேற்று புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு விஜயம் செய்தனர்.

அங்கு பன்குடாவெளி கரடியனாறு, இலுப்படிச்சேனை ஆகிய இடங்களில் மின்சார நிலையங்களையும் திறந்து வைத்தனர். அங்கு புலிகளின் பிரதிநிதிகளுடனும் அமைச்சர்கள் கலந்துரையாடினர்.

புலிகளின் மட்டு-அம்பாறை விசேட தளபதி ரமேஸ், மட்டு.- அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், நிர்வாகப் பொறுப்பாளர் ரெஜினோல்ட் ஆகியோருடன் அமைச்சர்கள் சந்தித்து உரையாடினர்.

மாலை 4.30 மணிக்கு கிழக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்தி தொடர்பாக மட்டு. கச்சேரியில் நடைபெற்ற கூட்டத்திலும் அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

## நேற்று வளைகுடாப்போரின் 12 ஆவது நாள்

# சதாமின் அரண்மனை அடியோடு தகர்ப்பு; தகவல் தொடர்பு அமைச்சகம் மீது தாக்கு!

பக்தாத்,ஏப்.1

ஈராக் போரின் 12ஆவது நாளான நேற்று தலைநகர் பக்தாத் மீது சரமாரியாக ஏவுகணைகளும், குண்டுகளும் வீசப்பட்டன. சதாம் ஹுசைனின அரண்மனை, தகவல் தொடர்புதுறை அமைச்சகம், குடியரசுப்படையினர் பயிற்சி பெறும் மைதானம் ஆகிய இடங்கள் குறிவைத்துத் தாக்கப்பட்டன.

கடந்த 11 நாள்கள் இடம்பெற்ற குண்டுவீச்சில் சதாம் ஹுசைனின் அரண்மனை பெரும்பகுதி சேதமடைந்து விட்டது. நேற்று அதிகாலை 3 மணிக்கு சக்தி வாய்ந்த ஏவுகணைகள் வீசப்பட்டதில் அந்த அரண்மனை முற்றிலுமாக நொறுங்கியது. இதையடுத்து விமான எதிர்ப்பு பீரங்கிகளால் ஈராக் படையினர் பதில் தாக்குதல் நடத்தினர். நேற்றுமுன்தினம் அமெரிக்கப் போர் விமானங்கள் சுமார் ஆயிரத்து 800 தடவை பறந்து குண்டுகளை வீசின. நேற்று அதிகாலையும அதேயளவுக்கு தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதற்கிடையே அமெரிக்க தரைப் படையினர் பக்தாத் நகருக்குள் நுழைய, தக்க சூழ்நிலையை எதிர்பார்த்தபடி உள்ளனர். அவர்கள் தற்போது பக்தாத் நகரில் இருந்து சுமார் 50 மைல் தொலைவில் முகாமிட்டிருக்கின்றனர்.

அமெரிக்கப் படையினரை தடுத்து நிறுத்த ஈராக் தற்கொலை படையை சேர்ந்த 4 ஆயிரம் பேர் எல்லையில் அணிவகுத்து நிற்கின்றனர். அவர்களை அழிக்கவும் குண்டுகள் வீசப்பட்டன.

பக்தாத் புறநகர்களில் நேற்று அதிகாலை 8 சக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்தன. இதனால், நகரமே புகை மண்டலமாகக் காட்சியளித்தது.

அமெரிக்க விமானப்படையினரின் குண்டுவீச்சு சேதத்தைத் தவிர்க்க ஈராக் வீரர்கள், சிறு, சிறு எண்ணெய்க் கிணறுகளைத் தீ வைத்து எரித்து கரும்புகையை ஏற்படுத்தி வான் வெளியை இருட்டடித்துள்ளனர்.

இதற்கிடையே, பக்தாத் நகர் வெளியே முகாமிட்டிருக்கும் அமெரிக்க இராணுவத் தளபதி ரிச்சர்ட் கூறுகையில் நாங்கள் தயாராக இருக்கிறோம். எந்த நேரத்திலும் பக்தாத் எங்கள் கைக்கு வரலாம். ஆனால், அதற்காக நாங்கள் அவசரப்படமாட்டோம்' என்றார்.

பக்தாத் நகர தகவல் தொடர்பு நிலையம் மீது நேற்று நடந்த ஏவுகணை வீச்சில், அது மேலும் நாசமானது. இதனால், பக்தாத்தில் உள்ள ஈராக் வீரர்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டு தகவல்களை பரிமாறிக்கொள்வது துண்டிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா கூறுகின்றது.



அமெரிக்க தாக்குதல்களில் தகர்ந்துபோன வீட்டின் முன் இடிந்துபோய் அமர்ந்திருக்கும் ஈராக்கிய முதியவர்.

மத்திய பக்தாத் மீது நேற்று அதிகாலை 2 சக்தி வாய்ந்த குண்டுகள் வீசப்பட்டன. அதில் பலத்த உயிர் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இதற்கிடையே தாங்கள் நடத்திய எதிர்த்தாக்குதலில் 2 அமெரிக்க பீரங்கிகளை அழித்துவிட்டதாக ஈராக் அறிவித்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் 31 ஏவுகணைகளை வீசி எதிர்த்தாக்குதல் நடத்தியதாக ஈராக் இராணுவம் கூறியுள்ளது.

இதேவேளை, நஜவ நகரை பாதுகாக்க அமெரிக்கப் படைகள் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளதாகவும -

தென்புறத்திலிருந்து பக்தாத் செல்லும் பிரதான சாலையில் உள்ள நஸிரியாவைக் கைப்பற்ற மேலும் 5 ஆயிரம் வீரர்களை அப்பகுதிக்கு அமெரிக்கா அனுப்பியுள்ளதாகவும் - கூறப்படுகிறது.

பக்தாத்திலிருந்து சுமார் 160 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள நஸிரியாவை ஏற்கெனவே 7 ஆயிரம் அமெரிக்க வீரர்கள் சூழ்ந்துள்ளனர். நஸிரியா அருகே தாம் கைப்பற்றிய ஈராக்கிய இராணுவ முகாம்கள் இரண்டிலிருந்து ஆயுதங்கள், வெடிமருந்துகள் ஆகியவற்றுடன், இரசாயனத் தாக்குதலிலிருந்து பாதுகாப்பளிக்கும் முகமூடிகள் மற்றும் கவச ஆடைகளைக் கைப்பற்றியதாக அமெரிக்க இராணுவம் கூறுகிறது.

இதற்கிடையில் அமெரிக்கப்படையினர் 6 நாள்களுக்கு தரைத் தாக்குதலை நிறுத்தியதாக அறிவித்திருந்த அமெரிக்க அதிபர் புஷ், தரை வழித் தாக்குதல் நிறுத்தப்படவில்லை என்று நேற்று அறிவித்தார்.

ஆனால், ஈராக்கிய இராணுவம் தொடர்ந்து தாக்குதலை நடத்துவதாலேயே, தனது முன்னைய அறிவிப்பை மாற்ற வேண்டிய நிலைமை அமெரிக்க அதிபருக்கு ஏற்பட்டதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

(ஒ)

## போரின் நேற்றைய நிலைவரங்கள்

★ தனது படையினர் மீதான அதிபர் சதாமின் கட்டுப்பாட்டைச் சீர்குலைக்க ஈராக்கிய தகவல் தொடர்பு அமைச்சகக் கட்டடம் தாக்கப்பட்டது.

★ ஈராக்குக்கு அதரவளிப்பதை நிறுத்துமாறு சிரியாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

★ கைவிடப்பட்ட ஈராக்கிய இராணுவ முகாமிலிருந்து நச்சுவாயு இரசாயனங்களை மீட்டதாக அமெரிக்க இராணுவம் அறிவிப்பு.

★ தனது இரு வீரர்கள் போரில் உயிரிழந்ததாக பிரிட்டன் அறிவிப்பு

★ பஸ்ரா நகரைக் கைப்பற்றும் தனது பலநாள் முயற்சியைப் பிரிட்டிஷ் படையினர் தொடர்ந்தனர்.

# ஈராக்கின் பலத்தைக் குறைவாக மதிப்பிட்டுவிட்டது அமெரிக்கா!

## ஆஸ்திரேலியப் பாதுகாப்பு அமைச்சர் கருத்து

சிட்னி,ஏப்.1

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் சிறப்பு அதிரடிப்படையின் ஆற்றலைக் குறைத்து மதிப்பிட்டுவிட்டது. அமெரிக்க இராணுவத் தலைமையகம். அதனால்தான் ஈராக் மீதான அதன் இராணுவத் தாக்குதலில் எதிர்பார்த்தபடி முன்னேற்றம் இல்லை என்று ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் ரொபேட் ஹில் கருத்துக் கூறியுள்ளார்.

தொலைக்காட்சி செய்தி நிறுவனமொன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது:-

சதாம் ஹுசைனது சிறப்பு அதிரடிப்படையின் முக்கிய பணியே, உள்ளூர்ப் பகுதிகளில் பாதுகாப்பில் ஈடுபடுவதாகும். ஆனால், இவற்றை கூட்டணிப் படைகளுக்கு எதிராக ஈடுபடுத்தியுள்ளது ஈராக். இவற்றின் தாக்குதல் கடுமையாக உள்ளது. அதனால்தான் அமெரிக்கப் படைகளால் விரைவாக முன்னேற முடியவில்லை.

இந்தப் போர் நீண்ட காலம் தொடரும் என்று கூறுவதற்கில்லை. ஆனால், கடினமானதாக இருக்கும் எனலாம்.

2 ஆயிரம் வீரர்களை வளைகுடாவுக்கு அனுப்பியுள்ளது ஆஸ்திரேலியா. தம்மிடம் தற்போதுள்ள உணவு, ஆயுதம், எரிபொருள் இருப்பைக் கொண்டே பல மாதங்களுக்கு தமது நடவடிக்கைகளை இவர்கள் தொடரமுடியும்.

இன்னும் கூடுதலான வீரர்களை ஆஸ்திரேலியா அனுப்பாது என்றார் ஹில்.

ஆஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் அலெக்ஸாண்டர் டௌனர் கூறியதாவது:-

"சதாமின் அதிரடிப்படைகளின் எதிர்ப்பால் கூட்டணிப்படைகள் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேறிச் செல்ல முடியவில்லை. முன்னதாக அவை விரைந்து முன்னேறிச் சென்றதும் கூட அவற்றுக்குப் பிரச்சினையாக அமைந்துவிட்டது" - என்றார் அவர்.

(ஒ)

# தற்கொலைத் தாக்குதலாளியின் குடும்பத்துக்கு ரூ.34லட்சம் பரிசு!

## ஈராக் அதிபர் அறிவிப்பு

ஈராக்கின் தெற்கு நகரமான நஜாப்பில் கடந்த சனிக்கிழமை ஈராக் தற்கொலைப் படை வீரர் திடீர்த் தாக்குதல் நடத்தினார். டாக்சி சாரதி வேடத்தில் வந்த அவர், தனக்கு உதவுமாறு அமெரிக்க வீரர்களை அழைத்தார்.

4 அமெரிக்க வீரர்கள் அவரை சூழ்ந்து நின்று சோதனையிட்டனர். அப்போது அந்த நபர் தனது உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச செய்தார். இதில் அவரும் 4 அமெரிக்க வீரர்களும் இறந்தனர்.

அந்த ஈராக் வீரர் அலிஜபார் என்று தெரியவந்துள்ளது. அவருக்கு மனைவியும் குழந்தைகளும் உள்ளனர். அவர் குடும்பத்துக்கு 34 லட்சம் ரூபா பரிசு வழங்கப்படும் என்று சதாம் ஹுசைன் அறிவித்துள்ளார்.

இது தவிர ஈராக் இராணுவத்தில் 2 உயர் விருதுகளும் அந்த வீரருக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதற்கிடையே குவைத்தில் முகாமிட்டுள்ள அமெரிக்க இராணுவ முகாம்மீது நேற்றுமுன்தினம் தற்கொலைப் படைவீரர் ஒருவர் தாக்குதல் நடத்தினார். இது 2ஆவது தற்கொலைப்படைத் தாக்குதல் ஆகும்.

இதில் 15 அமெரிக்க வீரர்கள் படுகாயம் அடைந்துள்ளனர். அவர்களில் பலரது நிலைமைகள் கவலைக்கிடமாக உள்ளன.

(ஒ)

## ஹெலி விபத்தில் அமெ. வீரர்கள் உயிரிழப்பு!

வாஷிங்ரன்,ஏப்.1

அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஈராக்கின் தெற்குப் பகுதியில்வீழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 3 அமெரிக்க வீரர்கள் இறந்தனர்; ஒருவர் காயமுற்றார். அமெரிக்க இராணுவத் தலைமையகம் இதனைத் தெரிவித்துள்ளது. ஹெலி தற்செயலாக வீழ்ந்து விபத்துக்குள்ளானதாக பென்டகன் செய்தித் தொடர்பாளர் லெப். கேணல் டேவிட் லப்பன் தெரிவித்தார்.

## ஈராக் போரைக் கண்டித்து

# அமெ. குளிர்பான நிறுவனம் மீது இந்தியாவில் கடும் தாக்குதல்!

ஹைதராபாத்,ஏப்.1

ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தியாவின் ஆந்திர மாநிலம் குண்டூரில் உள்ள பெப்சி குளிர்பான நிறுவனத்தின் களஞ்சியம் மீது நக்சலைட்கள் தாக்குதல் நடத்தினர்.

குண்டூர் மாவட்டத்தில் படுகுரலா என்னுமிடத்திலுள்ள பெப்சிநிறுவன களஞ்சியத்துக்கு 10 நக்சலைட்கள் ஆயுதங்களுடன் வந்து தாக்குதல் நடத்தினர்.

தாக்குதல் நடத்துவதற்கு முன்னர் அங்கு பணியில் இருந்த 4 ஊழியர்களை அங்கிருந்து வெளியேறும்படி அவர்கள் கூறினர்.

ஈராக் மீதான போர் தொடங்கிய பின்னர், ஆந்திராவில் அமெரிக்க குளிர்பான நிறுவனம் மீது நக்சலைட்கள் நடத்திய மூன்றாவது தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ)

# சர்ச்சையில் சிக்கிய ரம்ஸ்பீல்ட்

யுத்தச்செலவைக் குறைக்கும் வகையில் போரில் ஈடுபடும் அமெரிக்கப்படையினர் சிறிய மற்றும் இலகு ரக ஆயுதங்களை பயன்படுத்தும் திட்டத்தை ஏற்கும்படி அமெரிக்கப் பாதுகாப்புத்துறைச் செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் இராணுவத் தளபதிகளுக்கு அழுத்தம் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து கடும் விமாசனங்கள் எழுந்துள்ளன. இலகு ரக ஆயுதங்களைப் பயன்படுத்தும் திட்டம் மற்றும அது தொடர்பான ரம்ஸ் பீல்ட்டின் அழுத்தங்கள் குறித்து அமெரிக்கச் சஞ்சிகை ஒன்று கட்டுரை வெளியிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்தே சர்ச்சை எழுந்துள்ளது.



அமெரிக்கா எதிர்பார்த்ததை விட ஈராக் போர் நீண்ட காலம் தொடர்வது ஏறக்குறைய உறுதியாகிவிட்டது. இதேவேளை, உணவு மற்றும் இராணுவத் தளபாடங்களை போர் முனைப் படையினருக்கு விநியோகிக்கப் பெரும் செலவாகிறது தவிர குடிதண்ணீருக்கும் மேலதிகச் செலவு ஏற்படுகிறது.

இந்நிலையில் அதிக செலவு பிடிக்கும் கரைக மற்றும் வான் ஏவுகணைத் தாக்குதல்களை மட்டுப்படுத்த அமெரிக்க அரசு விரும்புகிறது. இதனால், இலகு ரக சிறிய ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்கும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. ஆனால், இதனை ஏற்க அமெரிக்கத் தளபதிகள் மறுத்து வருகின்றனர். இது பேரழிவை ஏற்படுத்தும் என்று நம்புகின்றனர். ஆனால், இத்திட்டத்தை ஏற்குமாறு அரசு வற்புறுத்துவதாகக் கூறப்படுகிறது.

(ஒ)

### பாதுகாப்பு வலயத்தில் உள்ளவற்றில்

# ஒரு வீட்டைக்கூட விட்டுத்தராதோர் எமக்கு உரிய தீர்வைத் தருவார்களா?

## மக்களின் கேள்வி இது என்கிறார் கேணல் கருணா

மட்டக்களப்பு,ஏப்.1

யாழ்ப்பாணத்தில் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் சுமார் 35 ஆயிரம் வீடுகளில் படையினர் நிலை கொண்டுள்ளனர். அவற்றில் ஒரு வீட்டைக்கூட திருப்பிக்கொடுக்க அவர்கள தயங்குகின்றனர். இந்த நிலையில் தமிழருக்கு உரிய தீர்வைத் தருவார்களா? என்ற சந்தேகம் தமிழ் மக்கள மத்தியில் வலுவடைந்து வருகிறது. இவ்வாறு விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா குறிப்பிட்டார்.

சமூகப்பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வியாழக கிழமை முதல் மூன்று தினங்கள் இடம பெற்ற பெண்கள் தேசிய மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கரடியனாறு மைதானத்தில மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பானுகா தலைமையில் இறுதிநாள் கலை அமர்வுகள், கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றன.

கேணல் கருணா அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தாவது:-

நீண்ட காலத்தின் பின்னர் போர் ஓய்ந்துள்ள நிலையில் தற்போது சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. நாம் விழிப்பாக இருக்கவேண்டிய காலமிது. போர் காரணமாக முன்னர் தமிழர் பகுதிகளை அழித்தனர். ஆனால், எமது தேசியத் தலைவரின் வழிநடத்தலில் நாம் மேற்கொண்ட பதிலடித் தாக்குதலின் விளைவுகளை சிங்கள தேசமும் அனுபவிக்கத் தொடங்கியதாலேயே, சமாதானத்துக்கு ஆதரவாக வாக்களித்து இந்த அரசை சிங்கள மக்கள் பதவியில் அமர்த்தியுள்ளனர் - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-9)

# முஸ்லிம் இனத்தை அங்கீகரித்த முதல் தமிழ்த் தரப்பு புலிகளே!

## பிரதி அமைச்சர் பாராட்டு

முஸ்லிம்களை ஒரு தனியான இனமாக அங்கீகரித்து, அரசியல் அங்கீகாரத்தை வழங்கிய முதலாவது தமிழர் தரப்பு தமிழீழ விடுதலைப புலிகள் மட்டுமே என்று பிரதி அமைசசர் பஸீர் சேகுதாவூத் பாராட்டினார்.

எந்தவோர் இனமும் அடக்கி ஒடுக்கப்படுகின்ற போதுமட்டுமே ஆயுத ரீதியாகச் சிந்திக்க முற்படுகின்றது. எனவே, முஸ்லிம் இளைஞர்களுக்கு இவ்வாறான சிந்தனைகள் எழாமல் நடவடிக்கைகளை மேற்கொள்வது சகோதர தமிழ்த் தலைமைகளின் பொறுப்பாகும் என்றும் பிரதி அமைச்சர் கூறினார்.

செங்கலடி, பதுளை வீதியை அண்டியுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான வயல் நிலங்களில், முஸலிம் மக்கள் மீண்டும் விவசாயத்தை மேற்கொள்வது தொடர்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற உபகுழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும்போது பிரதியமைச்சர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான உறவினை இனி எந்தவொரு சக்தியாலும் அழிக்கமுடியாது என்பதனை, மீண்டும் முஸ்லிம்கள் நெற்செய்கை பண்ண அனுமதிக்கப்பட்ட நிகழ்வு எடுத்துக்காட்டுகின்றது. இரண்டு இனங்களையும் சேர்ந்த மககள் ஒருவரை ஒருவர் புறந்தள்ளிவிட்டு தமக்கான பொருளாதார கட்டமைப்புக்களை வகுக்கமுடியாது. அவை ஒருபோதும் வெற்றியளிக்கப் போவதில்லை என்றும் பிரதி அமைச்சர் மேலும் கூறினார். (ஒ-9)

## குருநகர் கடற்கரை வீதி புனரமைப்பு ஆரம்பம்

குருநகர்,ஏப்.1

பலத்த் சேதமடைந்துள்ள குருநகர் கடற்கரை வீதி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரால் புனரமைக்கப்பட்டு வருகிறது. இந்த வீதியை புனரமைக்குமாறு குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி சம்பந்தப்பட்ட திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது. (எ-51)

## அதிபர் மறுப்பு

'பாடசாலைகளின் தரவேறுபாடுகளை அகற்றுவது கல்வி வளர்ச்சிக்கு அவசியம்' என்ற தலைப்பில் கடந்த 24ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்த கட்டுரை தனது பாடசாலையால் வெளியிடப்பட்டது அல்ல என்று சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை அதிபர் எஸ்சிவ கணேசசுந்தரன் மறுத்துள்ளார். (ஐ)

## இறை சித்தப்படி வாழ்வோம்

### தவக்காலச்சிந்தனை - 28 ஆம் நாள் -

மனித வாழ்வு நிரந்தரமில்லாதது. ஆதிவாழ்விலே ஒவ்வொரு மனிதனும் 130 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்ததாகக் கணிக்கப்பட்டது. ஆனால், தற்போதைய நிலையிலே 80வயதைத் தொடுவது கூட சாதனையாகவுள்ளது. இன்றைய காலகட்டங்களில் பல இளைஞர், யுவதிகளின் இறப்பு அதிகளவில் உள்ளது. எது எப்படியெனினும் நாம் வாழ்கின்ற நாள்கள் கொஞ்சம் தான். ஆனால், அதற்குள் சாதிக்க வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன. உயிரோடு இருக்கும்வரை எம்மை பெயர் சொல்லி அழைப்பார்கள் மரித்து விட்டாலோ வெறும் பிணம் தான். எமது வீடு மரண வீடுதான். எமக்குப் பெயர் சடலம்தான் ஆனால அந்த மரண வீட்டில் இறந்தவரின் வாழ்க்கைச் சரித்திரம் உருண்டோடும்.

எது சரி? எது பிழை? என்று நிர்ணயிக்க முடியாத குழப்பங்கள் மத்தியில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆயினும், இறைவனோடு ஒன்றித்து வாழும்போது நன்மையையும் தீமையையும் பிரித்தறிகின்ற தன்மையை அறிகிறோம். உலகில் எம்மை எதிர்கொள்கின்ற தீயவழிகளான கோபம், பிடிவாதம், அகங்காரம், வஞ்சகம், இறுமாப்பு இப்படியான குணங்கள் எம்மில் சில சேரும் போது அவைகளை எம்மிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலக்கிட முயற்சிக்க வேண்டும்.

இன்றைய இறை சிந்தனை எம்மை அழைத்து நிற்பதுவும் அதுவே. "நலமடைந்துள்ளீர்; இதைவிடக் கேடானது எதுவும் உமக்கு நிகழாதிருக்க இனிப் பாவம் செய்யாதீர்" என்று மன்னித்து விடுகிறார் ஆண்டவர். எமது நாடு பல அழிவுகளைச் சந்தித்தது. மக்கள் அனுபவித்த துயரங்களும் இழப்புக்களும் போதுமென்ற நிலை. சமாதானம் மலர ஆர்வம் மிக அவசியம். இறை வேண்டலும் இறை பராமரிப்பும் எம்மை ஆட்கொள்ள மனமாற்றத்தின் காலமாகிய தவக்காலத்தை பயனுள்ள காலமாக எம்மனங்களை மாற்றி எங்களுக்குக் கேடானது எதுவும் நிகழாமல் இருக்க இறை சித்தத்திற்கு எம்மை மாற்றிக்கொள்வோம். ★



யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற பணியாளர்களைக் கௌரவிக்கும் பாராட்டு விழா அண்மையில் சங்கத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெற்றது.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சங்கத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், உபதலைவர் பெ.ஜேக்கப், பொதுமுகாமையாளர் மு.தெய்வேந்திரம், சங்கச்செயலாளர் திருமதி புஸ்பம் நவரெட்ணம், வர்த்தக முகாமையாளர் எஸ்.அன்னராசா, சங்கத்தின் ஊழியர் நலன்புரிச் சங்கத் தலைவர் பரா. சாந்தகுமார், செயலாளர் அ.அன்ரனிசில்வா, பொருளாளர் நா.குமணதாஸ் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் பாராட்டுப் பெற்ற பணியாளர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். *(படம் : அரியாலை செய்தியாளர்)*

### இ.தே.தோ.தொழிலாளர் சங்கத்தின்

# நிர்வாகக் குழுவில் ஆகக் கூடுதலான தமிழ் உறுப்பினர்களுக்குப் பதவிகள்

கொழும்பு,ஏப்.1

ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கும் இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் நடப்பு வருட அதி உயர் நிர்வாகக் குழுவுக்கு 'ஆகக்கூடுதலான தமிழ உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட பொதுச் செயலாளராக கே. வேலாயுதம் எம்.பி. தெரிவுசெய்யப்பட்டுள்ளார். முன்பு பொதுச் செயலாளராக விருந்த ராஜா செனவிரத்ன இப்போது தலைவராக்கப்பட்டுள்ளார்.

உபதலைவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஐந்து பேரில் நால்வர் சிறுபான்மையினத்தவர்கள். மத்திய பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் எச்.ஆர்.ஜயதிலக்க மட்டுமே பெரும்பான்மை இனத்தவர். எம்.கந்தையா, கே.குணசீலன், கே.சுப்பிரமணியம், எம்.எல்.எம்.அபுசாலி ஆகிய நால்வரும உப தலைவர்களாவர்.

இதேவேளை, பிரதிப் பொதுச் செயலாளராக சி.காசிலிங்கமும், உதவிச் செயலாளர்களாக எம்.சுந்தரலிங்கம், எஸ்.மணிமுத்து, டி.யோகச்சந்திரன் ஆகியோருடன் ஆர்.ஏ.டி.ஆரியலதா என்ற பெண்மணியும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கட்சியின் பொருளாளராகப் பிரதி அமைச்சர் நவீன் திஸாநாயக்காவும், நிர்வாகச் செயலாளராக எம்.எஸ்.ஏ. எச்.மொஹிதீனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ஒ)

# அரை நிர்வாணமாக வீட்டுக்குள் புகுந்து யுவதியைத் தூக்கிச்சென்று படுகொலை!

### பொலன்னறுவை கல்விகாரையில் இடம்பெற்ற சம்பவம்

கொழும்பு,ஏப்.1

பொலன்னறுவை கல்விகாரைப் பிரதேசத்தில் காடையர் கூட்டம் ஒன்று நடத்திய கொடூரக் கொலை அட்டகாசத்தில் இளம்பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டார். அதைத் தடுக்க முற்பட்ட அயலவர் ஒருவரும கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் இடம பெற்றது. தந்தை வெளியூர் சென்றிருந்த நேற்றுமுன்தினம் ஜானகிகுமாரி என்ற அந்த இளம்பெண்ணும் அவரது தாயாரும் வீட்டில் தனியே இருந்தனர். நள்ளிரவு கடந்த சில மணிநேரத்தில் அரைநிர்வாண கோலத்தில் வீட்டுக்குள புகுந்த சுமார் 6 பேர் அடங்கிய கோஷ்டியினர் ஜானகிகுமாரியின் தாயை முதலில் கத்தியால் குத்தினார்கள். பின்னர் ஜானகிகுமாரியைக் கதறக் கதறத் தூக்கிச் சென்றனர். அப்போது அயலவர் ஒருவர் ஓடிவந்து அதைத் தடுக்க முற்படவே அவருக்கும் கத்திக்குத்து விழுந்தது. இதனால் அவர் அந்த இடத்திலேயே மரணமானார்.

சம்பவத்தை அறிந்து அங்கு கூடியவர்கள் கொலை நடந்த வீட்டுக்கு அருகில் உள்ள அடர்ந்த பற்றைக் கிணறு ஒன்றிலிருந்து ஜானகிகுமாரியின் சடலத்தை மீட்டனர். அவரது உடலில் பல இடங்களில் இரத்தக் காயங்கள் காணப்பட்டன.

இச்சம்பவத்தில் காயமடைந்த இரண்டு பெண்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ)


## எக்ஸ்போ ஏவியேஷன்

இல. 1E, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே. 021 222 3891

071 348888, 071 349999, 0777 730666

| காலைநேர விமானசேவை | புறப்படல் இரத்மலானை | வந்தடைதல் பலாலி | புறப்படல் பலாலி | சென்றடைதல் இரத்மலானை |
|---|---|---|---|---|
| திங்கள். செவ்வாய். புதன் | 06.30 | 07.30 | 08.15 | 09.15 |
| வெள்ளி | 10.45 | 11.45 | 12.30 | 13.30 |
| சனி | 08.15 | 09.15 | 10.00 | 11.00 |
| மாலைநேர விமானசேவை | | | | |
| செவ்வாய் | 12.45 | 13.45 | 14.30 | 15.30 |
| வெள்ளி. சனி | 16.00 | 17.00 | 17.45 | 18.45 |
| ஞாயிறு | 14.00 | 15.00 | 15.45 | 16.45 |

குறிப்பு :- புதிய நேர அட்டவணைக்கேற்ப பயணிகள் தமது மீள் உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

★★ குளிரூட்டப்பட்ட இலவச போக்குவரத்து

யாழ். - பலாலி - யாழ்.

இரத்மலானை - கொட்டாஞ்சேனை - இரத்மலானை

★★ வெளிநாட்டு பிரஜைகளுக்கும், உள்நாட்டு பிரஜைகளுக்கும் ஒரே வகையான கட்டணமே அறவிடப்படுகிறது.

ஒருவழி - 2,425/-

இருவழி - 4,550/-

(சி-27033)


## 31 ஆவது நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 20 - 08 - 1938



மறைவு 02 - 03 - 2003

### அமரர் நாகநாதர் சிவலிங்கம்

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் - J.E.DB)

சீரும் சிறப்புடனே எமை வாழவைத்த
எங்கள் அன்பின் திருவுருவே!
எம்மை விட்டுப் பிரிவதை சிறிதும்
சிந்தியாது மறைந்ததன் மர்மமென்ன?

எங்கள் அன்புத் தந்தையார் 02.03.2003 அன்று சிவபதமடைந்த வேளையில் நேரில் கலந்துகொண்டும், ஆறுதல் செய்திகள் அனுப்பியும் எமது துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (01.04.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

*"செட்டிச்சோலை"*
*அளவெட்டி வடக்கு.*

(16174)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

உதயன்

# தமிழர் ஐக்கியத்துக்கு வேட்டு: தமிழ்த் தேசியத்துக்கு வீழ்ச்சி!

தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்குச் சவால் விடும் வகையில் திரைமறைவில் பெருமெடுப்பில் சதித் திட்டம் தீட்டப்படுகின்றது என அபாயச் சங்கு ஒலிக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகைய சதித் திட்டத்தின் ஆரம்பமாகவே "தமிழ்த்தேசியத்தின் ஏகபிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்கமுடியாது" என்ற ஆனந்தசங்கரி எம்.பியின் கூற்றைக் கருத வேண்டியுள்ளது.

- இப்படி கூறியிருக்கின்றார் ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் பிரமுகரும் அக்கட்சியின் சார்பில் யாழ்.மாவட்டத் தேர்தலில் போட்டியிட்ட முதன்மை வேட்பாளருமான க.தேவதாசன்.

தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ்த் தேசியத்தின் ஏகபிரதிநிதிகள் என்று கடந்த பொதுத் தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரகடனம் செய்திருந்ததையும், அதற்கான அங்கீகாரத்தைத் தமிழ்த்தேசியம், ஜனநாயக வழிமுறையின் ஊடாக மிகத்திருத்தமாக வெளிப்படுத்தியிருந்ததையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஓர் இயக்கம் தான் நேரடியாகத் தேர்தலில் போட்டியிடாமலேயே ஜனநாயக வழியில் மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்ட ஓர் அரசியல் புதுமை, கடந்த தேர்தலில்தான் இடம்பெற்றது என்று புளகாங்கிதமடைகிறார் ரெலோ முதல்வர் என்.ஸ்ரீகாந்தா. இந்தப் புதுமையைக் கேள்விக்கு உள்ளாக்கும் சதியில் ஆனந்தசங்கரி குழுவினர் இறங்கியிருக்கிறார்களே என்று அவர் கவலையும் தெரிவித்திருக்கின்றார்.

ஆக, ஆனந்தசங்கரியின் புதிய நிலைப்பாடு தமிழரின் அரசியலில் பலத்த சர்ச்சையை, பரபரப்பை ஏற்படுத்தியிருப்பது உண்மை.

தென்னிலங்கை ஊடகங்கள் மற்றும் சில வெளிநாட்டுத் தூதரகங்கள் போன்றவற்றின் ஆதரவும், உதவியும், தூண்டுதலும், பின்னணியும் ஆனந்தசங்கரி குழுவினரை பெரிய சக்தியாக வெளியே காட்ட உதவுகின்றன என்பது குறிப்பிடப்பட வேண்டியது.

அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு அடிமைப்பட்டுக் கிடக்கும் ஈழத்தமிழினம், தனது உரிமைகளைப் பெறுவதற்காகக் கடந்த நான்கு, ஐந்து தசாப்த காலமாகப் பல்வேறு வழிகளில் போராடி வருகின்றது.

தமிழினத்தின் உரிமைப் போரை அடக்குவதற்காகக் காலங்காலமாக முயன்றுவரும் பேரினவாதிகள், அதற்கான ஒரு நடவடிக்கையாக - முக்கிய செயற்பாடாக - ஈழத் தமிழரின் ஐக்கியத்தைச் சிதைக்கும் முயற்சியை முனைப்பாக மேற்கொண்டு வந்தனர்.

அந்தப் பேரினவாதிகளோடு இப்போது வெளிநாட்டுச் சக்திகள் சிலவும் சேர்ந்து கொண்டிருக்கின்றன என்று சந்தேகிக்கப்படுகின்றது.

கடந்த பொதுத் தேர்தலின் போது விடுதலைப் புலிகளின் பின்னால் முக்கியமான தமிழ்க் கட்சிகள் திரண்ட போது, தமிழரின் ஐக்கியம் கிட்டிவிட்டது; இது விடயத்தில் பேரினவாதிகளின் எதிர்பார்ப்பு முறியடிக்கப்பட்டு விட்டது என்று மனம்மகிழ்ந்துதான் போனார்கள் தமிழ்மக்கள்.

அப்போது அந்த ஐக்கியத்துக்குள் தன்னையும் இணைத்துக் கொள்ளத் துடித்தது புளொட் அமைப்பு.

அந்தச் சமயம் அதற்கு வேட்டு வைத்த ஆனந்தசங்கரிதான் இப்போதும் தமிழர் ஐக்கியத்தைக் கேள்விக்குள்ளாக்கும் கணையை வெளியிட்டிருக்கின்றார்.

"புலிகள்தான் தமிழர்களின் ஏகபிரதிநிதிகள் அல்லர்; நாமும் பிரதிநிதிகளே!" என்று கூறும் அரசியல் தலைவர்கள் கடந்த ஐம்பது வருடங்களாகத் தமிழர்களின் பிரதிநிதிகளாக இருந்து தமிழ் மக்களுக்குத் தாங்கள் சாதித்தது என்னவென்பதைச் சற்று சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

தமிழர் ஐக்கியத்தின் இந்தக் குறுகிய காலச் சரித்திரத்தில் சாதிக்கப்பட்டவற்றையும், அதனைக் குலைப்பதன் மூலம் ஆனந்தசங்கரி குழுவினர் தாம் சாதிக்கப் போவது என்னவென்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

தமிழர் ஐக்கியத்தைக் குலைக்க விரும்பும் வெளிச் சக்திகளுக்கு உதவுவதன் மூலம் சுயலாபம் ஏதும் கிட்டக் கூடும். ஆனால், அதனால் பாதிக்கப்படப் போவது தமிழர் தேசியந்தான் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்வது நல்லது.

### கடந்த வருடத்தில் மட்டும்

# வெளிநாடுகளில் பணியாற்றுகின்ற இலங்கையரில் 233 பேர் மரணம்!

கடந்த வருடம் மத்திய கிழக்கு நாடுகள் உட்பட வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்களில் 233 பேர் இறந்துள்ளனர். இவர்களில் 119 பேர் ஆண்கள்; 114 பேர் பெண்கள். இறந்தவர்களில் 134 பேர் இயற்கை மரணத்திற்குள்ளாகியுள்ளனர். எஞ்சியோர் தற்கொலை, வீதி விபத்துக்கள் மற்றும் கொலைகள் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

ஆகக் கூடுதலாக சவூதி அரேபியாவில் தொழில்புரியும் சுமார் மூன்று லட்சத்து 50 ஆயிரம் பேர்களில் 81 பேர் இறந்துள்ளனர். இதில் 54 ஆண்களும், பெண்கள் 27 பேரும் அடங்குவர். இந்த 81 இறப்புக்களில் இயற்கை மரணத்திற்கு உட்பட்டவர்கள் 43 பேர்; 7 பேர் தற்கொலைசெய்து கொண்டுள்ளனர். 26 பேர் வீதி விபத்துக்களில் சிக்கி மரணமடைந்தனர். ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். 4 பேர் வேறு காரணங்களால் இறந்துள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்றுள்ள 41 மரணங்களில் ஆண்கள் 18 பேர், பெண்கள் 23 பேர். இந்த 41 பேரில் இயற்கை மரணம் எய்தியோர் 24 பேர். தற்கொலை செய்தோர் மூவர். 10 பேர் வீதி விபத்துக்களிலும், வேறு காரணங்களால் 4 பேரும் இறந்துள்ளனர். மீதியான இறப்புக்கள் குவைத், லெபனான், ஜோர்டான், மலேஷியா, சைப்ரஸ், ஓமான், இத்தாலி, மாலைதீவு, பங்களாதேஷ், யேமென் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளில் இடம்பெற்றுள்ளன. (ஒ)

## நாட்டு நடப்பு

நிலையினில் உயர்ந்த மங்கை
காலினில் பாதசுரம் அசைய
கைவளை கலகலக்க
ஆலின் விழுதை ஒத்த
அணியென பின்னல் ஆட
சேலையில் மறைந்த மேனி
செப்பமாய் கர்ப்பைப் பேண
மாலையில் மலர்ந்த பூவால்
மரகதத் தேனும் சொட்ட
சாலையில் ஓரமாக நங்கை
சஞ்சலம் அற்றுச் செல்ல
நிலமகள் உவந்து மெல்லி
நிம்மதில் பெருமூச்சு நல்கும்
காலத்தைக் காணும் நாளை
காண்பனோ வாழ்வில் நானே!

- விகடகவி.

### சுற்றுலாப் பயணிகளுக்கு கண்காட்சியாகவே தெரியும்

# குடாநாட்டு மக்கள் பட்ட அவலத்தை எண்ணிப் பார்த்தால் கண்ணீர் வரும்!

## சமாதான சைக்கிள் பயணி உருக்கம்

யாழ்ப்பாணம்,ஏப்.1

'ஹையஸ்' வானில் வருபவர்களுக்கு குடாநாட்டு அழிவுகள் கண்காட்சியாகவே தெரியும். ஆனால், இந்த மக்கள் பட்ட அவலங்கள் கண்ணீரை வரவழைக்கும்.

சமாதானத்துக்கான சைக்கிள் பயணத்தை மேற்கொண்டு யாழ்.வந்த ஆர்.ராஜரட்ணசிங்கம் குணசேகர இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை சமாதானத்திற்கான சைக்கிள் சுற்றுலாவை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துசென்ற அவர் செய்தியாளரிடம் இதனைச் சொன்னார்.

- அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டபோது இருந்த சமாதானத்திற்கான ஆதரவு இன்று குறைந்து வருகின்றது. எதிர்க் கருத்துக்களே வலுப்பெற்று வருகின்றன. இதனையடுத்து சமாதானம்பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி, நம்பிக்கையையும் ஏற்படுத்தவேண்டும். இதனை நோக்கமாகக் கொண்டே இலங்கை முழுவதும் சைக்கிள் பயணம் மேற்கொள்கின்றேன்.

சமாதானத்திற்கான போராட்டம் வலுப்பெறுதல் வேண்டுமே தவிர முரண்பாட்டுக்கான போராட்டங்கள் வலுப்பெறுவது எப்போதும் எமது நாட்டிற்குப் பொருத்தமற்றதாகவே இருக்கும். மீண்டும் யுத்தம் வேண்டாம் என்ற குரல் தீவிர யுத்தப்பற்றாளர்களின் செவிப்பறைகளைக் கிழித்து பட்ட அவலங்களை எடுத்துக் கூறவேண்டும்.

நான் சைக்கிளில் வந்ததன் மூலம் வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் மக்கள் அடைந்திருக்கும் அவலங்களைக் காணக்கூடியதாக இருந்தது. வன்னியில் சோதனைகளின் மத்தியிலும் பல



சாதனைகள் புரிந்த ஒரு சிறந்த வீர வரலாறு மறைந்திருப்பதைக் கண்டேன்.

'ஹையஸ்' வானில் சுற்றுலா வருபவர்களுக்கு யாழ்ப்பாணத்தின் இடிந்த கட்டடங்களும், அழிந்த இயற்கையழகும் தொல்பொருள்களாகவும் காட்சிப் பொருள்களாகவுமே தென்படும்.

அங்கெல்லாம் வாழ்ந்த மக்கள் பட்டிருக்கக் கூடிய அவலங்களைச் சில நிமிடங்கள் கண்மூடி சிந்தித்தால் கண்ணீர் வரும்.

எனக்கு அப்படியான சோக வரலாற்றினைக் கடந்தவருடம் சைக்கிள் சுற்றுலா வந்தபோது உணரக்கூடியதாக இருந்தது. இதனாலேயே இன்று இலங்கை முழுவதும் சமாதானத்தினை வலியுறுத்தி என் உடல் உளைச்சலையும் பொருட்படுத்தாது இச் சுற்றுலாவினை மேற்கொள்கின்றேன்.

மக்கள் மீண்டும் மீண்டும் சமாதானத்திற்காக ஏதோ ஒரு வகையில் குரல் கொடுத்தவண்ணமும், அதற்காக ஏதோ ஒரு நிகழ்வை நடத்திய வண்ணமும் இருத்தல் வேண்டும். அப்போதுதான் சமாதானம் விரைவாக மலரும் - என்று அவர் தெரிவித்தார். (ஒ-12)

# நாய்களைக் கொல்லப் பயன்படும் நஞ்சுமருந்துக்குத் தட்டுப்பாடு!

## இதனால் கட்டாக்காலி தொல்லை அதிகரிப்பு

சண்டிலிப்பாய்,ஏப்.1

கட்டாக்காலி நாய்களை நஞ்சூட்டிக்கொல்வதற்கு பயன்படுத்தப்படும் நஞ்சு மருந்து நீண்டகாலமாக யாழ்.சுகாதார திணைக்களத்திற்கு கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படவில்லை. இதன் காரணமாக வலி.தென்மேற்கு, வலி.மேற்கு பிரதேச சபை பிரிவுகளில் கடந்த பல மாத காலமாக கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் பணி மேற்கொள்ளப்படாமல் உள்ளது.

இந்த நஞ்சு மருந்து கையிருப்பில் இல்லாமல் இருப்பதாகவும் - ஆகவே, பயிற்றப்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு தத்தமது பகுதிகளில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்குமாறும் -

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி வலி.தென்மேற்கு பிரதேச சபை மற்றும் வலி.மேற்கு பிரதேச சபை நிர்வாகங்களை கடித மூலம் கேட்டிருந்தார்.

ஆனால், இதற்கென பயிற்றுவிக்கப்பட்ட தொழிலாளர் தமது சபைகளில் இல்லை என்று இதற்கு பிரதேச சபை நிர்வாகங்கள் பதிலளித்தன. இதனால் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் பணியை மேற்கொள்ளாது அவை இருந்து வருவதாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

இதேவேளை - சங்கானை பட்டினப்பகுதியிலும், பண்டத்தரிப்பு பட்டினப் பகுதியிலும் மற்றும் சுழிபுரம், ஆனைக்கோட்டை, மானிப்பாய் ஆகிய பகுதிகளிலும், கட்டாக்காலி நாய்கள் பெருகி பொதுமக்களுக்கு தொல்லை கொடுத்து வருவதாகவும் -

நாய்களுக்கு தற்போதைய வெப்பமான கால நிலையினால் விசர்நோய் ஏற்படக் கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-135)

### நாளை

பங்குனி 19
புதன்கிழமை
(02.04.2003)
திதி: பிரதமை
பின்னிரவு 3.17 வரை.
நட்சத்திரம: ரேவதி
பின்னிரவு 1.30 வரை.
சுபநேரம் : 4.41 - 6.11
ராகுகாலம் : 12.11 - 1.41
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

பணத்தை முதலீடாகக் கொண்டு தேடும் செல்வாக்கு நீண்டநாள்கள் நிலைத்திருப்பதில்லை.

### உள்ளூராட்சி மன்றங்களின்

# திட்ட முன்வரைபுகளை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை

வலி.தென்மேற்கு,ஏப்.1

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 72 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தனித்தனியே 7 துறைகளில் திட்ட முன்வரைபுகளை சமர்ப்பிக்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர் தெ.நு.விஜயலட்சுமி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் திட்ட முன்வரைபுகளின் அடிப்படையிலும், அவற்றின் அவசியத் தன்மை, தேவைப்படும் நிதியின் தன்மை என்பவற்றுக்கிணங்கவும் இவ்வாண்டுக்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

*திட்ட வரைபு கோரப்பட்ட ஏழு துறைகளும் வருமாறு:-*

★ ஆயுர்வேத சுகாதார நிலையம்.
★ உள்ளூர் ஆளுகைக்குட்பட்ட குடிதண்ணீர் விநியோகத் திட்டம்.
★ உள்ளூர் ஆளுகைக்குட்பட்ட பொது குழாய்க்கிணறுகளின் விபரம்.
★ பொதுக் கிணறுகளின் விவரம்.
★ திண்மக் கழிவகற்றல் முகாமை.
★ வடிகால்களின் விவரம்.
★ உள்ளூராட்சி அதிகார சபையினால் பராமரிக்கப்படும் மாதர், சிசு பராமரிப்பு நிலையங்களின் விவரம்.

மேற்படி விபரங்களை அந்தந்தப்பகுதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக மென்தட்டில் (புளொப்பி) தயாரித்து அனுப்பி வைக்குமாறும் உள்ளூராட்சி ஆணையாளர் கேட்டுள்ளார்.

குறிப்பிட்ட கிராம மட்ட அமைப்புக்களின் உதவியுடனும் அவர்களின் சிபாரிசுடன் திட்டங்களை முன்வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (எ-185)

## பெரும் மலிவு விற்பனை

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

25.03.2003 முதல் 14.04.2003 வரை

சகல வகையான புடைவைகளையும்
விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

## லைடன் புடைவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. : 222 2381

(C/37080)


## யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர் சங்கம்

### நிரந்தர நியமனம் கோரி மறியற்போராட்டம்

யாழ். மாவட்ட சுகாதாரத் தொண்டர்களாகிய தீவகம், யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய், தெல்லிப்பழை, வடமராட்சி, தென்மராட்சி உள்ளடங்கலாக அனைத்துப் பிரிவுகளுக்குமான நிரந்தர நியமனம் கோரி நாளை (02.04.2003) புதன்கிழமை காலை 7.00 மணிக்கு யாழ்ப்பாணம் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனைக்கு முன்பாக நடத்தவிருக்கும் மறியற்போராட்டத்தில் அனைத்துப் பிரிவு சுகாதார தொண்டர்களும் தவறாது சமுகந்தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(16159) - நிர்வாகம்.

## தமிழீழ வைப்பகம்

## அறிவித்தல்

யாழ்.குடாநாட்டிற்கான தமிழீழ வைப்பகக் கிளை பளை நகரில் செயற்படத் தொடங்கியுள்ளது. எனவே, யாழ். குடாநாட்டில் வசிக்கும் வழமைதாரர்கள் பளை நகரிலுள்ள தமிழீழ வைப்பகக் கிளையுடன் தொடர்புகொண்டு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளலாம் என்பதை அறியத் தருகின்றோம்.

மேலாளர்,
ஆளுகை,
நடுவப் பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி-27052)




இமாமி பவுடர்கள் நாள் முழுவதும் உங்களுக்குத் புத்துணர்ச்சியையூட்டி நறுமணத்துடன் திகழ வைக்கிறது.

அம்லா ஹெயர் ஒயிலில் அம்லாவும் விற்றமின் Cயும் அடங்கியுள்ளதால் இது தலைமயிரை அடர்த்தியாக வளரச் செய்வதுடன் போஷாக்கும் அளிக்கிறது.



நவரத்ன ஒயில் நாள்முழுவதும் தலையைக் குளிர்மையாக வைத்திருக்க உதவுகிறது. இது தலைவலி, தலைப்பாரம், தூக்கமின்மை, அலுப்பு போன்றவற்றை நீக்க உதவுவதோடு தலை முடியையும் நன்கு வளரச் செய்கிறது.





இமாமி போரோபிளஸ் அன்ரிசெப்ரிக் கிறீம்
இது சருமத்தில் ஏற்படுகின்ற வெடிப்புக்கள், வரண்ட உலர்ந்த சருமம் கால் வெடிப்புக்கள் போன்றவற்றுக்கு உடனடி நிவாரணத்தைத் தருகிறது.
ஒர நாளில் இரண்டு முறை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உபயோகிக்கவும் இது நறுமணமூட்டப்பட்ட கிறீம். ஆதலால் உடலின் எந்தப் பகுதிக்கும் ஏற்றது.

சந்தைப்படுத்துவோர்:
HARCOURTS(PRIVATE)LTD.
No:14, Station Road, Dehiwala.

யாழ்.முகவர்:
JEGHAN PHYARMACY
ஜெகன் பார்மஸி
462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021-2222194



# சுடர் ஒளி

## 06.04.2003 இதழில்

விலை 14/=




- சும்மா கிடக்கும் காணிகளில் படைமுகாம்களை நிறுவும் திட்டம். - குடாநாட்டில் எதிர்ப்பு வலுக்கிறது - (வடபுலம்)
- பாலாவின் வன்னிப் பயணமும் படையணியின் ஊடுருவலும்.
- நடுநிலை கூறும் தரப்புக்கள் கடுகளவும் பேணாத அவலம். - (நேரடி)
- வைகோ விடுதலைக்கு தமிழகத்தில் பலமான தளம்.
- ஈராக்கில் இரத்தவெறி பிடித்த போர்.
- யார் இந்த சதாம்? - (தொடர்)
- மட்டக்களப்பில் மீண்டும் யுத்தகாலக் கெடுபிடிகள்.
- வாளாவிருந்த ஆனந்தசங்கரியின் தேளாகக் கொட்டும் கருத்துக்கள்.
- ஐயோ! என்ரை.... - (நகைச்சுவை )

மற்றும் சிறுகதை, மசாலா மிக்ஸ், க்ரைம் டயறி, கவிதைப் புனல், இணையத்தளங்களிலிருந்து, சினிமா, இளஞ்சுடர், பெண், மதன் சித்திரத்தொடர், அலைகளின் காவியம் உட்பட பல்வேறு சுவையான அம்சங்கள்.

(C/27053)

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்த வெங்காயச்செய்கை சூடுபிடிக்கிறது

யாழ்ப்பாணக் குடாநாடு வெங்காயச் செய்கைக்குப் பெயர்பெற்றது. இற்றைக்கு 20 ஆண்டுகளுக்கு முன்னர் - போர்ச் சூழ்நிலை ஆரம்பமாவதற்கு முன்னர் - கொழும்புச் சந்தையில் யாழ்ப்பாண விளைபொருள்களுக்கு பெரும் கிராக்கி இருந்தமை நாமெல்லோரும் அறிந்த விடயமே. இவ்விளை பொருள்களில் முக்கிய இடம்வகித்தது வெங்காயமே.

சந்தைவாய்ப்பும், பயிர்ச்செய்கைக்கான வசதிகளும் இருந்த அவ்வேளையில் யாழ்.குடாநாட்டு விவசாயிகள் வெங்காயச்செய்கையில் பெரும் ஆர்வங்காட்டி ஈடுபட்டதுடன் பெரும் பயனும் பெற்றனர்.

இடையில் யுத்தம் காரணமாக, போக்குவரத்து தடைப்பட்டமையாலும் பயிர்ச்செய்கைக்கான அவசிய உரவகை, கிருமிநாசினி ஆகியவற்றைப் பெறுவதில் ஏற்பட்ட சிரமம் காரணமாகவும் விவசாயிகள் சிரமமுற்றதுடன். விளைச்சலால் பெற்ற அறுவடைக்கான சந்தை வாய்ப்பு பெரும் இலாபம் அளிக்காத காரணத்தாலும் தமது வெங்காயச்செய்கை முயற்சிகளைக் குறைத்துக்கொண்டனர்.

நாட்டில் சுமுகநிலை தோன்றத் தொடங்கியதையடுத்து யாழ்குடாநாட்டு விவசாயிகள், குறிப்பாக செம்மண் வளம்மிக்க வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பகுதி விவசாயிகள் மீண்டும் இவ்வெங்காயச் செய்கையில் ஆர்வமுடன் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

இவ்வெங்காயச்செய்கை தொடர்பாக மேலோட்டமான சில விவரங்களை வாசகர்களதும் விவசாயிகளதும் நன்மை கருதி கீழே தருகிறோம்.

வெங்காயம், 'அலியம் அஸ்கலோனியம்' என்ற தாவர இனத்தைச் சேர்ந்தது. சிங்களமொழியில் 'ரதுலூனு' எனவும் ஆங்கிலத்தில் 'ஷலட் ஒனியன்' எனவும் அழைக்கப்படுகிறது. இது சமையலில் முக்கியத்துவம் பெற்றுள்ள ஓர் உபபொருளாகும். கறிவகைகளுக்குச் சுவைகூட்டுவதுடன், சம்பல், பச்சடி போன்றவற்றுக்கும் சுவை சேர்க்கிறது. மருத்துவ ரீதியில் பார்ப்பினும், இது உடலுக்கு உகந்த ஒன்றாகும். கந்தகம், புளியுப்பு, அல்புமின் மற்றும் உயிர்ச்சத்து 'சீ'என்பன வெங்காயத்தில் அடங்கியுள்ளன.

இது ஒரு குமிழ்ப்பயிர். அதாவது நாம் நாட்டும் குமிழின் அடிப்பாகத்திலிருந்து பல குமிழ்கள் தோன்றி பெரும் விளைச்சலைத் தரும் அதுமட்டுமன்றி, இது ஒரு குறுகிய காலப்பயிர். தொடர்ச்சியாக பயிர்செய்வோர், தமக்கு அடுத்தபோக நடுகைக்கான விதை வெங்காயத்தை தமது முன்னைய விளைச்சலில் இருந்து எடுத்து கையிருப்பில் வைத்திருப்பின், புதியதொரு வெங்காய நடுகைக்கான மூலப்பொருள் கொள்வனவுக்கான செலவை மிச்சப்படுத்தமுடியும். ஒருபோக நடுகை முதல் அறுவடைவரை பசளை, கிருமிநாசினி மற்றும் நீர் பாய்ச்சற்செலவு ஆகியவற்றுக்கு ஒருதொகைப் பணம் செலவுசெய்ய நேரிடுவதுடன், களையெடுத்தல், மண் அணைத்தல், கிருமிநாசினி விசிறல் மற்றும் நீர்ப்பாய்ச்சல் ஆகிய வேலைகளை விவசாயிகள் தமது உடல் உழைப்பின் மூலமோ அல்லது கூலி செலுத்துவதன் மூலமோ நிறைவேற்றிக்கொள்ளவேண்டியுள்ளது.

வெங்காயத்துக்கு முன்னர் செய்த பயிருக்கு இடப்பட்ட இயற்கைப் பசளையின் மீந்த பயனை வெங்காயம் பாவிப்பதால் இயற்கை பசளைக்காக பெருந்தொகை செலவிடவேண்டி ஏற்படாதாயினும், குறிப்பிட்ட தருணங்களில் பாவிக்கவேண்டிய இரசாயனப் பசளைகள், பாவிக்கப்படவேண்டி நேர்வதால் அதற்காகக் குறிப்பிட்ட ஒரு தொகைப் பணச்செலவு செய்ய நேரிடுகிறது

அதிக மழைவீழ்ச்சி இப் பயிருக்கு உகந்ததல்ல. எனவே, உலர் வலயத் தரைகளில் நீர்ப்பாசனத்தின் மூலம் சிறந்த பலனைப் பெறமுடியும்.

**வெங்காய செய்கைக் காலம்**

பெரும்போகம் - ஜனவரி முதல் பெப்ரவரி வரை.

இடைப்போகம் - மே முதல் ஜூலை வரை.

சிறுபோகம் - ஜூலை முதல் செப்ரெம்பர் வரை.

வெங்காய விதைகள் சதுரப்பாத்திகளில் மூன்று அங்குல இடைவெளிக்கொன்றாக நடப்படும் நூற்றுக்குநூறு வீதம் யாழ்.மாவட்டத்தில் இம்முறையே கைக்கொள்ளப்படுகிறது.

**வர்க்கங்கள்**

எமது நாட்டிலேயே விருத்தியாகிப் பிறப்பாக்கம் செய்யப்பட்ட வர்க்கங்கள் எவையும் இல்லை. பண்டைக்காலத்தில் புகையிலை வியாபாரத்துக்காக இந்தியா சென்று திரும்பிய விவசாயிகள் அங்கிருந்து கொண்டு வந்த வர்க்கங்களே தற்போது பாவனையிலுள்ளன.

அவையாவன:-

வேதாரணியவெங்காயம், பெலரி வெங்காயம் என்பன ஆகும்.

வேதாரணிய வெங்காயம் இந்தியாவின் வேதாரணியம் என்ற கிராமத்திலிருந்து கொண்டுவரப்பட்டது. இதுவே வேதாள வெங்காயம் என்ற பெயரால் வழங்கப்படுகிறது. யாழ்மாவட்டத்தில் விளையும் வர்க்கங்களில் அதிக விளைவைத் தருவது இந்த இனமாகும். ஓர் ஏக்கருக்கு (16 பரப்பு அல்லது 4000கன்று)160 முதல் 180 அந்தர் விளைவைப்பெற இயலும். இதனை நீண்டகாலம் சேமித்துவைக்க இயலாது. ஏனைய மாவட்ட மக்களால் இவ்வினம் அதிகம் விரும்பப்படுவதால் பிற மாவட்டங்களில் இதற்கு நல்ல சந்தை வாய்ப்பு உண்டு.இவ் வேதாரணிய வெங்காயத்தை நாட்டி அறுவடை செய்யும் கால இடைவெளி 80 முதல் 90 வரையான நாள்களாகும். இவ்வர்க்கம் பூக்கும் தன்மை கொண்டது. பூத்தாழ்களை அறுவடை செய்து சந்தைப்படுத்தமுடியும்.ஓர் ஏக்கரில் ஏறக்குறைய 8 முதல் 10 அந்தர் வரையிலான பூத்தாழ்களை அறுவடை செய்ய இயலும். கீரை வகை போன்று சந்தைகளில் வெங்காயத் தாழும் விற்பனை செய்யப்படுகிறது. பூக்கும் பூத்தாழ்கள் அகற்றப்படவேண்டியது மிக அவசியமாகும்.

**சிறு வெங்காயம்**

கடந்த பல ஆண்டுகளாய் யாழ்.மாவட்ட விவசாயிகளால் அதிக அளவில் பயிரிடப்படும் சிறு வெங்காயம் காரத்தன்மை கூடியது.இப்பயிர் பூப்பதில்லை. அறுவடையின்பின் 5 முதல 6 மாதங்கள் வரை சேமித்து வைத்துச் சந்தைப்படுத்தலாம்.இது 60 முதல் 70 நாள்களில் அறுவடை செய்யக்கூடிய இனமாகும்.ஏக்கரொன்றுக்கு 120 முதல் 160 அந்தர் வரை விளைவைத்தரக்கூடிய இனமாகும்.

**அரவிந்த்**

இது தவிர,வெங்காயம் ஊடுபயிராகவும் செய்கை பண்ணப்படுகிறது. ஊடுபயிர் என்பது (Catch - crop) வாழைச்செய்கையை ஆரம்பிக்கும் காலத்திலும், கத்தரி, மிளகாய் மற்றும் கூரணை, மரவள்ளி, இராசவள்ளி ஆகிய பயிர்வகைகளை ஆரம்பிக்கும் சமயத்திலும் அவற்றை நாட்டிய பாத்திகளிலும் பாத்திகளின் புருவங்களிலும் வெங்காய விதைகளை நாட்டி குறிப்பிட்ட காலத்தில் வெங்காயத்தை மட்டும் அறுவடை செய்தபின், முதலில் பயிரிட்ட பயிர்வகைகளைத் தொடர்ந்தும் பேணிப் பலன் பெறுதலாகும்.இதனால் ஒரே சமயத்தில் இரு வேறுவித பலன்கள் பெற முடிவதுடன் ,தனியான நீர் பாய்ச்சல் எதுவும் மீதப்படுத்தப்படுகிறது.

வெங்காயச் சாகுபடிக்கு நீர் தேங்காத நிலம் அவசியமானது.மணல் கலந்த இருவாட்டித் தரையே இதற்கு மிக வாய்ப்பான நிலத்தன்மையாகும். மழை குறைந்த, சூரிய ஒளி அதிகமுள்ள காலநிலையில், ஒழுங்கமைந்த நீர் பாய்ச்சல் மூலம் வெங்காயச் சாகுபடியில் நல்ல விளைச்சலைப் பெற முடியும்.

ஏக்கரொன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் அமோனியம் சல்பேட், சுப்பர் பொஸ்பேற் மற்றும் பொட்டாஸ் ஆகியவை சேர்ந்த அடிக்கட்டுப் பசளை இடுவதால் நல்ல விளைச்சல் பெறமுடியும். கெந்தகம் வெங்காயப் பயிருக்கு அத்தியாவசியமானதால் கெந்தகம் சேர்ந்த அமோனியம்சல்பேட், பயிரின் வளர்ச்சிக்கும் உரிய பருவத்தில் வெங்காயம் பல குமிழ்கள்விட்டுப் பெருகவும் உதவும்.

இவைதவிர,யாழ்.குடாநாட்டில் பம்பாய் வெங்காயப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் முகமாக விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் பல முயற்சிகளை மேற்கொண்டு வந்த போதிலும்,குடாநாட்டின் குறிப்பிட்ட ஒருசில பகுதி விவசாயிகளே அப்பயிர்ச்செய்கையில் ஆர்வங்காட்டுவதாகத் தெரியவருகிறது. இதனால் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களின் முயற்சிக்கேற்ற பலன் கிடைப்பதில்லை எனக் கருதமுடியும்.

வெங்காயச்செய்கையின் மிக முக்கிய கட்டம் அறுவடையின் போதான காலநிலையும், அறுவடையின் பின் அதைக் களஞ்சியப்படுத்தலுமாகும். பொதுவாக விவசாயிகள் சந்தை நிலைவரத்தை அனுசரித்து, அறுவடை செய்ததும் அதனை உடனடியாகச் சந்தைப்படுத்த ஆர்வங்காட்டுவதில்லை. அறுவடை காலத்தில் சந்தை விலை கூடியிருப்பின் உடனடியாக விற்பனை செய்வதன்றி, பொதுவாக அதனைக் களஞ்சியப்படுத்தி, விலை அதிகரிப்பான வேளைகளில் விற்பனை செய்யவே விரும்புகின்றனர்.

எனவே,களஞ்சியப்படுத்தலில் அதிகவனம் செலுத்தப்படுவது அவசியம். நல்ல காற்றோட்டமும் நேரடியற்ற சூரிய வெளிச்சமும் கிடைக்கத்தக்க வகையில் பிடிகளாகக் கட்டித் தொங்கவிடப்படும் வெங்காயம் ஐதான வகையில் காற்றுப்புகத்தக்க இடைவெளிகள் கொண்டவகையில் பத்திரப்படுத்தப்படவேண்டும்.

**சந்தைவாய்ப்பு**

யாழ்குடாநாட்டில் முன்னர் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்கு உதவும் வகையில் அவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயத்தை நிர்ணய விலையில் கொள்வனவு செய்து வந்தன. இதனால், சிரமமின்றி நியாயமான விலையில் தம் உற்பத்திப்பொருள்களை விவசாயிகள் விற்பனை செய்யமுடிந்தது. அதுமட்டுமன்றி, வெங்காயம் கூடைதயாரிக்கும் குடிசைக் கைத்தொழிலுக்கும் இது வழிவகுத்தது. போர்ச் சூழ்நிலை காரணமாகக் கைவிடப்பட்டிருந்த இவ் ஒழுங்கு முறைகளை மீண்டும் அறிமுகப்படுத்துவதன்மூலம் வெளித் தரகர்களது தலையீட்டைக் கட்டுப்படுத்துவது மட்டுமல்லாது பொதுமக்கள் பங்காளிகளான கூட்டுறவுச் சங்கங்களின் இலாபம்,வினைத்திறன் என்பன அபிவிருத்தியடைய வாய்ப்புண்டு.

போர்ச்சூழல் தணிந்து, அமைதி நிலை நிலவும் இத்தருணத்தில் விவசாயிகள் உளரீதியாக உற்சாகம் கொண்டு விவசாய முயற்சிகளில் ஈடுபட ஆர்வமாயுள்ளனர். கடந்தகால சிரமங்களால் பொருளாதார ரீதியில் பாதிப்புற்றுள்ள அவர்கள், முன்னர் வழக்கத்திலிருந்து பயிர்ச்செய்கை முயற்சிகளுக்கான கடன் உதவிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் குறித்து ஆவலுடன் உள்ளனர். இதுவிடயத்தில் சம்பந்தப்பட்ட கூட்டுறவு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரச திணைக்களங்கள புதிய திட்டங்கள் எவற்றையாவது அறிமுகப்படுத்த விழைகின்றனவா என அவர்கள் ஆர்வங்காட்டுகின்றனர்.

யாழ்.மாவட்ட விவசாயிகளின் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்கு விவசாயத்திணைக்கள உத்தியோகத்தர்கள் கணிசமான உதவி புரிந்து வருகின்றனர். உதாரணமாக, இவ்வாரப் பத்திரிகைச் செய்திகளின்படி விவசாயத் திணைக்களத்தினால் வாரந்தோறும் விவசாயப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படவிருப்பதாகத் தெரியவருகின்றது. எனவே, நம் விவசாயப் பெருமக்கள் இவ்வகை பயிற்சி வகுப்புக்களில் கலந்துகொள்வதன் மூலமும் விவசாயப் போதனாசிரியர்களிடம் தம் விவசாய முயற்சிகளில் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடி அவர்களது வழிகாட்டல்களைப் பின்பற்றுவதன் மூலமும் தம் உற்பத்தித் திறனைப் பெருக்கி, தாமும், தாம் சார்ந்த சமூகமும் பயனடைய உதவ முடியும். ●




# வாசகர் திருமுகம்

## கவனிக்கப்படாத வீதி

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த லோட்டஸ் வீதி இடம்பெயர்ந்த காலத்திலிருந்து - இற்றை வரை திருத்த வேலைகள் எதுவுமின்றி சீரற்ற நிலையில் உள்ளது. இவ்வீதி வழியே மழை காலங்களில் வெள்ளம் பாய்ந்து கற்கள் புரண்டு இவ்வீதியால் செல்லும் துவிச்சக்கர வண்டிகளை தடம் புரள வைப்பதுடன் வாய்க்கால் அருகினுள் விழுந்து காயமடைந்து திட்டியபடியே செல்லுவோரையும் அவதானிக்க முடிகிறது. அத்துடன், இரு முக்கிய கோவில் தலங்களும் இவ்வீதியில் உள்ளன. திருவிழாக் காலங்களில் சுவாமி ஊர்வலம் செல்லுதல் பெரும் சிரமமாக இருக்கிறது. கோவில் நிர்வாகிகள் பல தடவை சம்பந்தப்பட்டோரிடம் கூறியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, தயவு செய்து இவ்வீதியால் செல்லும் மக்களின் துயர் துடைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

*லோட்டஸ் வீதி,*
*வண்ணார்பண்ணை.*

- பாதிக்கப்பட்ட மக்கள்.

## பரீட்சையில் சித்தியடைந்தும் நியமனம் கிடைக்காதது ஏன்?

மாலினி இராசேந்திரம் ஆகிய நான் 1999ஆம் ஆண்டு வெளியாகிய வர்த்தமானியின் பிரகாரம் நீதிமன்ற தட்டெழுத்தாளர் சேவைக்கு விண்ணப்பித்து 25.03.2000 ஆம் திகதியன்று அரசாங்கத்தினால் நடத்தப்பட்ட தட்டெழுத்தாளர் போட்டிப் பரீட்சையில் 1030036 எனும் சுட்டெண்ணின் கீழ் தோற்றி சித்தியெய்தியுள்ளேன்.

பரீட்சை நடைபெற்று மூன்று வருடங்கள் நிறைவு எய்தும் இவ்வேளையில் கூட இப்பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த ஒருவருக்குக் கூட நேர்முகப் பரீட்சை வைக்கப்பட்டு நியமனம் வழங்கப்படாததையிட்டு நாம் மிகவும் மன விரக்தியுற்ற நிலையில் இருக்கும் இவ்வேளையில், யாழ்.மாவட்ட நீதிமன்றங்களிலுள்ள தட்டெழுத்தாளர் வெற்றிடங்கள் நாள்சம்பள அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டு நிரப்பப்பட்டுள்ளன.

இப்படியான நியமனங்கள் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த எமக்கு வழங்காமல் ஏனையோருக்கு வழங்குவதைப் பார்க்கும்போது திறமையுள்ளவர்களுக்கு இங்கு சந்தர்ப்பம் மறுக்கப்பட்டு மேலதிகாரிகளின் சிபார்சு இருந்தால்தான் வேலைவாய்ப்பு என்ற நிலைமை போல் உள்ளது.

இந்நியமனம் தொடர்பாக நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட எமக்கு நியாயம் பெற்றுத்தந்துதவுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

*ஊரிக்காடு,*
*வல்வெட்டித்துறை.*

- இ.மாலினி.

## மின்மினியாக.... மின்குமிழ்கள்

கட்டுடை பகுதி, மின்மாற்றியிலிருந்து தொலைவில் அமைந்துள்ளதாலும் ஒற்றை வடம் (Single Phase) மூலம் வரையறைக்கு மேற்பட்ட வீடுகளிற்கு மின்சாரம் வழங்கப்படுவதாலும் இப்பகுதியில் இரவில் மின்னழுத்தம் 110V இலும் குறைவாகவே காணப்பட்டது. இதனால், இரவில் (6.00மணி தொடக்கம் 10.00மணி வரை) 110V மின்குமிழ்களையும் ஏனைய நேரங்களில் 240V மின்குமிழ்களையும் பாவித்து வந்தோம். தற்போது புதிதாக மின் இணைப்புகள் வழங்கப்படுவதால் மின்னழுத்தம் 6.00மணி தொடக்கம் 10.00மணி வரை) 60V அளவில் காணப்படுகிறது. இதனால் 110V மின்குமிழ்களின் பாவனையும் சாத்தியமற்றுப் போயுள்ளது. மேலும் மேற்படி இணைப்பிலிருந்து இரும்பு ஒட்டறை ஒன்றிற்கும் (Steel Welding Works) மின்வழங்கப்படுவதால் பகலிலும் மின்னழுத்தம் சீரற்றுக் காணப்படுகிறது. இதனால், மின் உபகரணங்கள் பழுதடைகின்றன. கடந்த காலங்களில் தனிநபர்களால் மேற்படி பிரச்சினை, மின்சாரசபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட போதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இறுதியில் அனைத்து மின்பாவனையாளர்களின் கையொப்பத்துடன் மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்ட போதும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. உயர்தர பரீட்சை நெருங்கும் நேரத்தில் மாணவர்கள் இதனால் பெரிதும் பாதிப்படைந்துள்ளார்கள். தயவுகூர்ந்து மின்சாரசபை விரைந்து நடவடிக்கை எடுத்து மேற்படி பிரச்சினையைத் தீர்த்துவைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*கட்டுடை,*
*மானிப்பாய்.*

- பாதிக்கப்பட்டுள்ளோர்.




யாழ்ப்பாணம் வந்த கண்டி மெற்றோ போலிற்றன் றோட்டறிக் கழகத்தினர் யாழ்.மைய றோட்டறிக் கழகத்திற்கு ஒரு தொகுதி மூக்குக் கண்ணாடிகளை அன்பளிப்புச் செய்த போது எடுக்கப்பட்ட படம்.

நோர்வே மக்களால் சேகரித்து அனுப்பப்பட்ட மூக்குக் கண்ணாடிகளே அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

(படம்:தேவராஜன்)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Ceynor பைபர் கிளாஸ் நீளம் 341/2' x101/2' அகலமான வள்ளம் விற்பனைக்குண்டு. எஞ்சின் யன்மார், 3 சிலிண்டர் S.M.3 மொடல், 45HP (Lord Hear) பயணிகள் லோஞ்சுக்கு உகந்தது. தொடர்பு: குஞ்சண்ணை, வேம்படி, வல்வெட்டித்துறை.(16158)

## காணி விற்பனைக்கு

மட்டுவில் வைரவர் கோவிலுக்குச செல்லும் வீதியில் 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: சாய் ராம் பாமசி, கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (16175)

## கைமாறிவிட்டது

02-03-2003 அன்று ஆவரங்காலில 5734155 என்ற இலக்கமுடைய பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி, மினிபஸ்ஸால் இறக்கும்போது கைமாறிவிட்டது. மாறிப்பெற்றுக் கொண்டவர், செ.செல்வதீபன், கோப்பாய் மத்தி, கோப்பாய் என்னும் முகவரியில் தொடர்புகொள்ளவும். (16178)

## மணமகன் தேவை

யாழ்இந்து குடும்பத்தைச் சேர்ந்த, 1969இல் மிருகசீரிடத்தில் பிறந்த, செவ்வாய்க்குற்றமுள்ள, பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை. முழு விபரத்துடன் தொடர்பு கொள்ளவும். விள.இல.1824 C/o உதயன். (15865)

## சத்துணவு வழங்க நடவடிக்கை

சாவகச்சேரி,ஏப்.1

வடபிராந்திய ஸ்ரீ சத்தியசாயி சேவா சமிர்த்தி நிலையத்தினர் சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களுக்கு நாளாந்தம் காலைவேளையில் சத்துணவு வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளனர். பாடசாலை அதிபர் க.தம்பிமுத்துவிடம் அண்மையில் இதற்கான உதவி வழங்கப்பட்டது. (ஒ-31)

## தொடர்பு கொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.1

கீழே பெயர் குறிப்பிடப்படுவோரை சொங்கிலுவைச் சங்கதேசக்குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிககப்பட்டுள்ளது.

☆ ஞானமலர் நாகராசா (498, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்),

☆ ஜெயந்தி ஸ்ரீமுருகேசமூர்த்தி (மே/பா - திருமதி டி.நடராசா மணியங்காடு, கொக்குவில் மேற்கு).

☆ ஆர்.காளிராசன் (சாந்தி அரிசி ஆலை, கோண்டாவில் கிழக்கு),

☆ தியாகராசா ஜெகதாம்பாள் (210, 6ஆம் குறுக்குத் தெரு மணியந்தோட்டம், கொழும்புத்துறை),

☆ பிரான்சிஸ் அம்மா (42, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்),

☆ செல்லையா நாகராசா (காசிப்பிள்ளை கோவிலடி, தெல்லிப்பழை). (ஐ)

## 'ரெலோ' அமைப்பின் மாவட்டச் செயலாளர்

யாழ்ப்பாணம்,ஏப்.1

ரெலோவின் யாழ்.மாவட்டச் செயலாளராக கிருஸ்ணன் கௌரிபாலன் (திலீப்) தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகத தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தில் அவர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டதாக கட்சிப் பிரமுகர் என் கே.விந்தன் தெரிவித்துள்ளார். (ஐ-10)


## மெசின் மைண்டர் தேவை

பிளேட்டன் மெசினில் வேலை செய்வதற்கு அனுபவம்வாய்ந்தவர் உடன் தொடர்புகொள்ளவும். தகுதிக் கேற்ற வேதனம் வழங்கப்படும்.

இலங்கையன்
ஸ்ரீ லங்கா அச்சகம்
336, கே.கே.எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 222 5698
(16183)

## வெங்காயம் கொள்முதல்

வெங்காயம் கொள்முதல் செய்யப்படும். விற்பனை செய்வோர் கீழ் உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வி. சி. வி. வைத்திலிங்கம்
இல. 26/14, 3ஆம் ஒழுங்கை,
வளாக வீதி,
திருநெல்வேலி. (16179)


# பிரதான...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக ஜீ.எல்.பீரிஸ் செயலாற்றி வரும் அதேவேளை, அரசின் பொருளாதாரம் தொடர்பாக பந்துல குணவர்த்தன கருத்து வெளியிட்டு வருகின்றார். அரசுக்கெதிரான மங்கள சமரவீரவின் கடுமையான விரோதப் போக்குக்கு மாத்தறையிலிருந்து அரசியலில் பிரவேசித்த மகிந்த விஜேசேகர முகம் கொடுத்து செயற்படுகின்றார். இன்று பராக்குப் பார்த்தபடி கனவான்கள் போன்று உட்கார்ந்திருக்கும் ஐ.தே.கட்சி உறுப்பினர்களுக்கு அரசியல் நடத்தும் முறை குறித்துச் சொல்லிக் கொடுப்பவர்களும், ஐ.தே.கட்சியின் பெயரால் அரசை நடத்திச் செலபவர்களும் இக்குழுவினரே. ஐ.தே.கட்சியைச் சேர்ந்தோர் இவ்விதம் பராக்குப் பார்த்துக்கொண்டு இருக்கும்வேளையில் பொ.ஐ.முன்னணி அரசை வீழ்த்துவதற்கு எவ்விதம் ரணிலுக்கு உதவினார்களோ, அதேபோன்று நாளை சந்திரிகாவை பதவியை விட்டு அகற்ற ரணில் விரும்புவாரானால், அதற்காக உதவவும் இக்குழுவினரால் மட்டுமே இயலும். அதற்கான சமிக்ஞை ரணிலிடமிருந்து கிடைக்கும் வரை அவர்கள் காத்திருக்கின்றனர்.

இந்த அடிப்படையில் நோக்கும் போது இன்று ஐ.தே.கட்சிக்கும், ஸ்ரீல.சு.கட்சிக்குமிடையே மோதல் எதுவும் இடம்பெறுவதாகக் கொள்ள முடியாது. உண்மையில் ஜே.வி.பியினரும், பொ.ஐ. முன்னணியில் இருந்து பிரிந்து வந்த குழுவினருமே மோதிக் கொள்கின்றனர். கை, கால் முறிய நேர்ந்தாலும், விழுந்துவிட நேர்ந்தாலும் பாதிப்படைபவர்கள் அவர்களே. இவ்வரு தரப்பினர்களுக்குமிடையே அபூர்வமானதோர் ஒற்றுமை காணப்படுகிறது. அதாவது, இவ்விரு குழுவினர்களும் பல்கலைக்கழகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். ஜே.வி.பியினரின் அரசியல் ஆரம்பம் பல்கலைக்கழக மாணவர் அமைப்பினூடாகவே இடம்பெற்றது. பொ.ஐ. முன்னணியிலிருந்து பிரிந்து வந்த குழுவினரில் பெரும்பாலானோரின் அரசியல் வாழ்க்கை இப்பல்கலைக் கழக மாணவர் அமைப்பினூடாகவே ஆரம்பித்தது. பேராசிரியர் ஜீஎல்பீரிஸ கூட பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிய வேளையிலேயே அரசியலில் பிரவேசித்தார். இது ஒரு புதுமையான ஒற்றுமையாகும். இவ்விரு தரப்பினர்களும் சண்டை சச்சரவுகளுக்கென்றே பிறந்தவர்கள் எனக் கூறப்படுவதற்கு இவை காரணங்களாய் இருக்கக்கூடும்.

இம்மோதல்களில் வெற்றியடையப் போவது யார்? ஜே.வி.பியினர் வெற்றியடைய நேர்ந்தால் ஐ.தே. கட்சியின் கதி அதோகதிதான். பொ.ஐ. முன்னணியிலிருந்து பிரிந்து வந்த குழுவினர் வெற்றியடைய நேர்ந்தால் சந்திரிகா வீட்டிற்குச் செல்லவேண்டி ஏற்படும். இவ்விதம் ஐ.தே.கட்சி பதவியிழக்க வேண்டி ஏற்பட்டால் அடுத்த பிரதமராகும் வாய்ப்பு அனுரா பண்டாரநாயக்கவுக்கே உண்டு. மாறாக சந்திரிகா வீட்டுக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டால் அடுத்த ஜனாதிபதியாகும் வாய்ப்பு ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிட்டும். ரணிலும் அனுராவும் 'றோயல்' கல்லூரியின் பழைய மாணவர்கள்.

இந்த வகையில் பார்க்கும் போது இம்மோதல்கள் றோயல் கல்லூரியின் கிரிக்கெட் போட்டி போன்று தோன்றுகின்றது. வேறொரு வகையாகக் கூறினால் இது இரு அரச குடும்பங்களைச் சேர்ந்த இருவருக்கும் இடையேயான போட்டியாகும்.

ஆனால் வேடிக்கை என்ன வென்றால் இந்த அரச குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் பெறப்போகும் வெற்றிக் கிண்ணத்துக்காக சிரமத்துடன் போட்டியில் ஈடுபடும் ஏனைய வீரர்கள் அனைவரும் கிராமப்புற இளைஞர்களே. ★

## ஈரவிழிகளுடன் ஈராண்டு

| அன்னை மண் சிறக்க | மண்ணைக் கண் நனைக்க |
|---|---|
| 1947 - 12 - 25 | 2001 - 03 - 23 |



### அமரர் கந்தன் குமாரசாமி

திதி: 01.04.2003

பாதிவழி கூட்டி வந்து பொறுப்புடனே கைகொடுத்து
போதித்த போதனைகள் புதுவாசம் வீசமுன் - விதிவரைந்த
தேதியிலே தேசம் விட்டு தேவலோகம் சென்றதனால்
தாதியற்றுத் தவிக்கின்றோம் மீதிவழி தொடர்வதற்காய்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சரஸ்வதி ச.ச. நிலையம் அருகில்,
உரும்பிராய் வடக்கு.

பிரிவுத்துயர் சுமக்கும்:
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.
(16184)

## கேள்வி அறிவித்தல்

### பிரதி மாகாண பணிப்பாளர் பணிமனை, சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

### தளபாடங்கள், உபகரணங்கள் வழங்கல்

பிரதி மாகாண பணிப்பாளர் பணிமனைக்கு மரத்தளபாடங்கள், இரும்புறுக்குத் தளபாடங்கள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் என்னால் 23.04.2003 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனேயே திறக்கப்படும். இதற்கான கேள்விப்பத்திரங்களைப் பெறவிரும்புவோர் மீளளிக்கப்படாத பிணைப்பணமாக ரூபா 100/- ஐ செலுத்தி 01.04.2003 முதல் இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்கள் 22.04.2003 பிற்பகல் 3.00 மணிவரை வழங்கப்படும். இக்கேள்விப்பத்திர உறைகள் அரக்கு முத்திரை இடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் *"பிரதி மாகாண பணிப்பாளர் பணிமனைக்கு தளபாடங்கள், உபகரணங்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்"* எனக் குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரம் திறக்கப்படும்போது கேள்விதாரரும் சமுகமளிக்கலாம். ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விதாரர் ஒரு மாத காலத்திற்குள் குறிப்பிட்ட பொருள்களை தாங்களே எமது பணிமனையில் ஒப்படைக்க வேண்டும். மரத்தளபாடங்கள் யாவும் வேப்ப மரத்தினால் அல்லது முதிரை மரத்தினால் செய்யப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் பணிமனை நேரத்தில் எமது பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தம் பொருத்திக்கொள்ளும் போது சித்தி பெறும் கேள்விதாரர் மொத்த வழங்கல் தொகையின் பத்து வீதம் பாதுகாப்பு பிணைப்பணமாகச் செலுத்தவேண்டும்.

58, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி-27066)

வைத்திய கலாநிதி
உ.சிவபாதசுந்தரம்,
மாகாண பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



### ஜீவராசா திவ்விகா

காந்தியூர் புலோலியைச் சேர்ந்த
ஜீவராசா - நிர்மலாவதி தம்பதிகளின்
செல்வப் புதல்வி செல்வி திவ்விகா

தனது பிறந்தநாளை தமது இல்லத்தில் இன்று (01.04.2003) செவ்வாய்க்கிழமை கொண்டாடுகிறார். அவரை பல்லாண்டு காலம் வாழ்கவென அம்மம்மா, அம்மப்பா, மாமாமார் அனைவரும் வாழ்த்துகிறார்கள்.

(16187)

க.உதயராஜ்
(மாமா)

## அனுதாப அஞ்சலி



### அமரர் சி.முருகேசம்பிள்ளை

*(ஓய்வுபெற்ற உதவி அரச அதிபரும், பருத்தித்துறை பிரதேச செயலக காணி கொள்வனவு குழுத் தலைவரும்)*

எமது பிரதேச செயலக காணி கொள்வனவுக் குழுத்தலைவரும், கோப்பாய், பருத்தித்துறை பிரதேச முன்னாள் உதவி அரசாங்க அதிபரும், முன்னாள் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருமான **சி.முருகேசம்பிள்ளை** அவர்களின் அமரத்துவச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் மிகுந்த துயரமும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் கலக்கமுற்றிருக்கும் இவரின் குடும்பத்தினருக்கும் உறவினர்களிற்கும் எமது ஆத்மார்த்தமான அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரின் ஆன்மா சாந்தி பெற்று மேனிலையடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

பிரதேச செயலகம்,
பருத்தித்துறை. (16180)

பிரதேச செயலர், உத்தியோகத்தர்கள்,
கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி
உத்தியோகத்தர்கள், வெளிக்கள
உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்களும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தாயின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 03 - 01 - 1940 | 02 - 03 - 2003 |



### அமரர் சுந்தரம் பசுபதி

*(உரும்பிராய்)*

அன்புக் கணவராகவும், ஆசை மருமகனாகவும், பிரியமான மச்சானாகவும், பாசமுள்ள அப்பாவாகவும், நேசமான மாமனாராகவும், ஆசைப் பேரனாகவும், உற்றார், உறவினர், நண்பர்கள், யாவருக்கும் பாசத்தையும், நேசத்தையும் ஆற்றி வந்த குலவிளக்கே!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*எல்லாம் வல்ல ஞானவைரவரை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.*

*முருகன் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*

துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
(16181) பேரன், மச்சான்மார், மச்சாள்மார்.

## நெஞ்சகலா ஈராண்டு நினைவலைகள்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 19 - 02 - 1971 | 01 - 04 - 2001 |



### செல்வி சி.ஸ்ரீஜெயதேவி

பாரினில் நாம் சிறக்க
சீருடன் எமை வளர்த்தீர் - இன்று
பாசத்துடன் அரவணைக்க
நாதியற்றுத் தவிக்கின்றோம்
பூவுலகை விட்டுவிட்டு
விண்ணுலகம் சென்றீரோ?
ஆண்டாண்டு காலம் சென்றாலும்
எம்மனதை ஆற்றாது உம்பிரிவு.

உடுப்பிட்டி. (16182)

உம்பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# பிரதான அரசியல் கட்சிகளை ஆட்டிப்படைக்கும் இரு குழுக்கள்

"ஐ.தே.கட்சியும் ஸ்ரீல.சு.கட்சியும் இந்நாட்டின் முக்கிய அரசியல் கட்சிகளாக விளங்கினாலும் இந்த இருகட்சிகளை இரண்டு குழுக்களே இயக்குகின்றன. ஸ்ரீல.சு.கட்சியை ஜே.வி.பி. ஆட்டிப் படைக்கிறது. அதே போல் பொ.ஐ.முன்னணியில் இருந்து பிரிந்து வந்த குழுவினர் (ஜீ.எல்.பீரிஸ், எஸ்.பி.திஸாநாயக்கா ஆகியோர்) ஐ.தே.கட்சியை ஆட்டிப்படைகின்றனர்" என்கிறார் கட்டுரையாளர் உப்புல் ஜோசெப் பெர்னான்டோ. 'லங்காதீப' நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

மோதல்கள் இடம்பெறவில்லையென்றால் அங்கு அரசியல் நடவடிககைகள் நடைபெறவில்லை என்பது அர்த்தமாகும். அரசியல் நடவடிக்கைகள் இடம்பெறாத இடத்தில் சச்சரவுகள், மோதல்கள் தோன்ற வாய்ப்பு இல்லை. இந்த வகையில் ஸ்ரீலங்காவின் அரசியல் நடவடிக்கைகள் ஆரம்பித்த நாள் முதல் இன்று வரையும் 'உறவினர்களின் கட்சி' எனக் கருதப்படும் ஐ.தே.கட்சியும், 'சொலமனின் பிள்ளைகளின் கட்சி' எனக்கருதப்படும் ஸ்ரீல.சு.கட்சியும் சண்டை சச்சரவுகளில் ஈடுபடவில்லை என்பதால், அரசியல் நடைமுறைகளும் ஒழுங்காக இடம் பெறவில்லை. இன்று இவ்விரு கட்சிகளும் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க அல்லது காத்துக்கொண்டிருக்க வேறு இரு குழுக்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. ஜே.வி.பி. மற்றும் பொ.ஐ.முன்னணியிலிருந்து வெளியேறிய குழு என்பவையே அவை.

பிரபல அரசியல் கட்சிகள் இரண்டும் பரபரப்பு எதுவுமின்றி அமைதி நிலை நாட்டி வந்த அரசியல் அரங்கில் இவ்விரு குழுக்களும் பரபரப்பு நிலையை உருவாக்கி சண்டை சச்சரவைத் தோற்றுவிக்கும் விதத்தில் இயங்குகின்றன. தற்போதைய அரசின் சமாதான முயற்சிகளை எதிர்ப்பதன் மூலம் ஜே.வி.பியும், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதன் மூலம் பொ.ஐ.முன்னணியில் இருந்து வெளியேறிய குழுவும் பரபரப்பையும், பதற்றத்தையும் உருவாக்க முயன்றன. இவ்வகையான சச்சரவுகள் இடம்பெறாதுவிட்டால் இன்று ஸ்ரீலங்காவில் அரசியல் நடைபெறவில்லையெனக்கூறலாம். அதேசமயம் 'உறவினர்களின் கட்சி' எனப்படும் ஐ.தே. கட்சியும் 'சொலமனின் பிள்ளைகளின் கட்சி' எனப்படும் ஸ்ரீல.சு.கட்சியும் இன்று இவ்விரு குழுக்கள் உருவாகும் சச்சரவுகளில் முடிவு குறித்து எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றன.

அண்மையில் ஜே.வி.பியினர் ஸ்ரீல. சு.கட்சியினருடன் இணைந்து வீதியில் இறங்கி எதிர்ப்பு பேரணி நடத்தியதும், பொ.ஐ.முன்னணியில் இருந்து விலகிய குழுவினர் ஐ.தே.கட்சியின் உறுப்புரிமை பெற்றுக்கொண்டமையும், தணிந்து போயிருந்த அரசியலை மீண்டும் சூடுபிடிக்க வைத்த நிகழ்ச்சிகளாக - நாடு முழுவதும் பரவச் செய்யும் முயற்சியாக - கருதமுடியும். 2001 பொதுத்தேர்தலுக்கு முன் இவ்விரு குழுக்களும் நாட்டின் பிரதான இரு அரசியல் கட்சிகளுடன் உத்தியோகப் பற்றற்ற விதத்தில் இணைந்திருந்த போதும், அண்மைய சம்பவங்களையடுத்து அந்த இணைப்பு உத்தியோக பூர்வ இணைப்புப் போன்று ஆகியுள்ளது.

'உத்தியோக பூர்வமான' அல்லது 'உத்தியோக பூர்வமற்ற' என்ற விதத்தில் விமர்சிக்கப்படுமளவுக்கு இன்றைய நாட்டு அரசியல் நடைமுறைகள் உரிய வகையில் இடம்பெறுவதில்லை. உண்மையில் 2000ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் முடிவுகளை அடுத்து அரசியல் நடைமுறைகள் இந்நாட்டில் அற்றுப் போய்விட்டன. தேர்தல் இடம்பெற்ற சமயம் நாட்டின் ஜனாதிபதியாக சந்திரிகாவும், நாடாளுமன்ற சபாநாயகராக அனுராவும் இருந்தனர். ரனிலைப் பிரதமராகக் கொண்டு தேசிய அரசொன்றை நிறுவும் பொருட்டு அவ்வேளையில் ஆட்சி அதிகாரத்தில் இருந்த பொ.ஐ.முன்னணி அரசும், எதிரணியாய் இருந்த ஐ.தே.கட்சியும் தம்மிடையே ஆரம்பித்த பேச்சுக்கள் வெற்றியடைந்திருக்குமானால், இன்று நாட்டில் ஐ.தே.கட்சியென்றோ, ஸ்ரீல.சு. கட்சியென்றோ இருவேறு கட்சிகள் இருந்திருக்காது. கட்சி ரீதியான அரசியல்வாதிகளும் இருந்திருக்க மாட்டார்கள். நாடாளுமன்றத்தின் பெரும்பான்மைப் பலம் அற்றிருந்த பொ.ஐ.முன்னணி அரசுக்கு அப்பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுத்தர ஜே.வி.பி. முன் வந்தமையும், அவ்விதம் பொ.ஐ.முன்னணிக்கு ஜே.வி.பி. உதவும் வகையில் இணையுமானால் பொ.ஐ.முன்னணியில் இருந்து வெளியேறி எதிரணியில் இணைவதற்கு ஒரு குழுவினர் தயாராய் இருந்தமையுமே தேசிய அரசொன்றை உருவாக்கும் நோக்கிலான அப்பேச்சின் தோல்விக்குக் காரணங்களாயின. அதுமட்டுமன்றி, உண்மையில் அன்று பொ.ஐ.முன்னணியிலிருந்து பிரிந்து வந்த குழுவினருக்கும ஜே.வி.பிக்கும் இன்று இவ்வகையான சச்சரவுகளை ஏற்படுத்த வாய்ப்பு ஏற்பட்டிராது. அதுமட்டுமல்லாது 2001 ஆம் ஆண்டில் பொதுத்தேர்தல் இடம்பெறும் நிலைகூடத்தோன்றியிருக்காது.



2001 பொதுத் தேர்தலுக்குத் தலைமைத்துவம் தாங்கி முன் நின்றவர்கள் இவ்விரு அணியினரேயொழிய, ஐ.தே.கட்சியோ அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ அல்ல.

ஆனால், 2001 பொதுத்தேர்தலையடுத்து, மீண்டும் இச்சச்சரவுகள் தணிந்து போக ஆரம்பித்தன. நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை ஸ்ரீல.சு.கட்சி கொண்டிருந்த அதேவேளை, பிரதமர் பதவி உட்பட அரசொன்றினை நிறுவும் அதிகாரம் ஐ.தே.கட்சிக்குக் கிடைத்தமையால், தேசிய அரசொன்றினை உருவாக்குவது குறித்து முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டமையே இதற்குக் காரணமாகும். இரு கட்சிகளும் ஒன்றிணைந்து தேசிய அரசொன்றினை உருவாக்குவது தொடர்பாக அதுவரையில் பேச்சுக்கள் ஆரம்பித்திருந்தாலும் அரசினால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளுக்கு எதிராக ஜே.வி.பி. மேற்கொள்ளும் திட்டங்களுக்கு ஸ்ரீல.சு.கட்சி அனுசரணையாக இருந்ததுபோன்று, பொ.ஐ.முன்னணியிலிருந்து விலகிச் சென்ற குழுவினர் சந்திரிகாவுக்கு எதிராக மேற்கொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஐ.தே.கட்சியும் வளைந்து கொடுத்தமையால், தேசிய அரசொன்றை உருவாக்கும் திட்டம் தோல்வியடைய நேர்ந்தது.

இந்தவகையில் நோக்கும் போது, இன்று இந்த நாட்டு அரசியலில் முடிவுகள் மேற்கொள்வது ஐ.தே.கட்சியோ, ஸ்ரீல.சு.கட்சியோ அல்ல. இன்று ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் ஐ.தே.கட்சிக்காக பொ.ஐ.முன்னணியிலிருந்து விலகிவந்த குழுவினரே அரசியல் முடிவுகளை மேற்கொள்கின்றனர். அதேபோன்ற உறக்க நிலையில் இருக்கும் ஸ்ரீல.சு.கட்சி சார்பில் ஜே.வி.பியினரே அரசியல் தொடர்பான விடயங்களில் முடிவு மேற்கொள்கின்றனர். இது அரசியலில் அபூர்வமான துரதிஷ்டம் மட்டுமல்லாமல் வரலாற்று துரதிஷ்டமுமாகும். ஜே.வி.பியினரும், பொ.ஐ.முன்னணியிலிருந்து பிரிந்து வந்த குழுவினரும் அடிப்படை நோக்கம் எதுவுமின்றி இவ்விதம் இயங்கவில்லை. கூட்டத்தனமான நோக்கத்துடனேயே இவ்விதம் செயற்படுகின்றனர்.

இன்றைய ஜே.வி.பியினர் பற்றி சிந்தித்தால் அவர்களை அவ்வளவு துச்சமாக எடுத்துக்கொள்ள இயலாது. ரோகண விஜேவீரவினாலும் அவரது திறமைமிக்க அரசியல் சபையாலும் இயலாத விடயங்களை நிறைவேற்றிக் காட்டிய குழுவின் இன்றைய ஜே.வி.பியின் இளைஞர்கள் ஆவர். அரசியல் அணுகுமுறையில் திறமைகொண்டிருந்த போதும் ரோஹண விஜேவீரவால் இந்நாட்டின் அரசியல் நிலைமைகளைப் புரிந்துகொண்டு அரசியல் நடத்த முடியவில்லை. அவரது அணுகுமுறைமூலம் இந்நாட்டு பொது மக்களைக் கவர்ந்து அவர்களது ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. விஜேவீரவினாலும் அவரது அரசியல் சபையாலும் செய்ய முடியாத விடயங்களை ஒரு பத்திரிகையாளரான விமல் வீரவன்ஸவினால் தன்னுடைய இளைஞர்களின் உதவியுடன் செய்து முடிக்க முடிந்துள்ளது. தமது ஜே.வி.பி. கட்சியை பொதுமக்களிடம் பிரபல்யம் பெறச்செய்ய விஜேவீரவால் முடியாதிருந்த போது, விமல் வீரவன்ஸவுடன் கூடஇருந்த இளைஞர் கூட்டம் கட்சிக்கு பொது மக்களிடையே அபிமானம் பெறவைத்தது. ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்புரிமையுடன் ஆரம்பமான பயணம், இன்று இந்நிலைக்கு வளர்ச்சி கண்டுள்ளது. இது இளைஞர்களின் திறமையினாலேயே சாத்தியமாயிற்று கடைசியில் நாடாளுமன்றத்தில் அரசை உருவாக்கும் அதிகாரத்தை தம்கைகளில் தங்க வைப்பதில் அவர்கள் வெற்றிகண்டனர். இருபது ஆண்டு கால முயற்சியின் பின்பும் - புரட்சி மூலம் இரு தடவைகள் முயன்றும் - விஜேவீரவினால் நிறைவேற்ற இயலாததை, 1994 ஆம் ஆண்டில் ஆரம்பித்த முயற்சியை ஒன்பது ஆண்டு கால இடைவெளியில் நிறைவேற்றிக் காட்டியுள்ளனர் அவ்விளைஞர்கள்.

தமிழில்: வீயெஸ்ரீ

தனது ஜே.வி.பி. கட்சியால் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது போனால், ஸ்ரீல.சு.கட்சியை முன்னிலைப்படுத்தி அதனூடாக அதிகாரத்தைக் கைப்பற்றும் திட்டத்தை விஜேவீர கொண்டிருந்தார். 1970 இல் கூட்டு முன்னணி அரசுக்கு ஆதரவு அளித்து ஸ்ரீல.சு. கட்சிக்குத் தாவுவதன் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற அவர் திட்டமிட்டார். முதலில் அவர் ஜனநாயக ரீதியில் அதிகாரத்தைக் கைப்பற்ற ஆர்வம் காட்டினார். இரண்டாவதாக ஆயுதப் போராட்ட மூலம் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி செய்தார். ஆனால், அவ்விரு முயற்சிகளிலும் அவர் தோல்வியடைய நேர்ந்தது. இரண்டாவது தடவையாக 1982 இல் பொதுஜன வாக்கெடுப்பின் போது ஸ்ரீல.சு. கட்சியுடன் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்தி பொதுஜன வாக்கெடுப்பில் வெற்றியடைவதன் மூலம் ஸ்ரீல.சு.கட்சியில் இணைந்து அதிகாரத்தைக் கைப்பற்ற ஜனநாயக நடைமுறை என்ற நிழல் தேடினார். அம்முயற்சியும் அவருக்கு தோல்வியையே அளித்தது. பின்னர் 1988 ஜனாதிபதித் தேர்தலின்போது எதிரணிப் பொது வேட்பாளரொருவரைத் தேர்தலில் நிறுத்த வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்து, ஸ்ரீல.சு.கட்சிக்கு ஆதரவு அளிப்பதாகக் காட்டிக் கொண்டு, ஆயுத பலத்தினால் ஸ்ரீல.சு.கட்சியைத் தம் வசப்படுத்தி ஆட்சியைக் கைப்பற்ற முயற்சித்தார். அம்முயற்சியின் போது அக்கூட்டு முன்னணிக்குப் பொதுமக்களின் ஆதரவைப் பெருக்கிக் கொள்வது தொடர்பாகவும், கிடைக்கும் நாடாளுமன்ற அங்கத்துவத்தைப் பங்கீடு செய்வது தொடர்பாகவும் மற்றும் அமைச்சுப் பதவிகளைப் பங்கிடுவது தொடர்பாகவும் பேச்சுக் கூட மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அம் முயற்சியும் தோல்வியைத் தழுவ நேர்ந்தது.

அன்று விஜேவீரவினால் நிறைவேற்ற முடியாத விடயத்தை, இன்று விமல் வீரவன்ஸ உட்பட இளைஞர் கூட்டம் நிறைவேற்றி வெற்றி கண்டுள்ளது. அதுமட்டுமன்றி, இன்று ஸ்ரீல.சு.கட்சியையும், பண்டாரநாயக்க குடும்பத்தவர்களையும் ஆட்டி வைப்பதில் அவர்கள் வெற்றி பெற்றுள்ளனர். இன்று இரட்டை டாக்டர் பட்டம் பெற்ற என்.எம்.பெரேரா மற்றும் கொலவின் ஆர்.டி.சில்வா போன்றோரால் கூட ஸ்ரீல.சு.கட்சியையும், பண்டாரநாயக்க குடும்பத்தினரையும் இவ்விதம் ஆட்டிப்படைக்க முடியவில்லை.

இன்றைய ஜே.வி.பியினர் எவரும் இரட்டை டாக்டர் பட்டங்களையோ அல்லது ஒற்றை டாக்டர் பட்டமோ பெற்றவர்களல்லர். ஊரில் ஈரப்பலாக்காய் மற்றும் பலாக்காய்க் கறியுடன் உணவுண்டு, தெரிந்த சிங்கள மொழியில் அரசியல் பற்றி பொது மக்களுக்கு விளக்கி, சிங்கள மொழியில் அரசியல் நடத்தும் இளைஞர்கள் அவர்கள். ஆகக் கூடினால் கொழும்புக்குச் சென்று பல்கலைக்கழகப் பட்டம் பெறுவதன் மூலம் வாழ்க்கையை நடத்தப் பழக்கப்பட்ட இளைஞர்கள் அவர்கள். அனுர திசநாயக, ஹந்துனநெத்தி, பிமல் மற்றும் விஜிதஹேரத் ஆகியவர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்த இளைஞர்கள், இவர்களில் எவரை எடுத்துக் கொண்டாலும் எல்லோரும் மேற்சொன்ன வகையினரே. இன்று பண்டாரநாயக்க குடும்பத்தினருக்கும், ஸ்ரீல.சு.கட்சிக்கும் அரசியல் நடத்தும் விதம் பற்றிக் கற்றுத் தருவது இந்த ஜே.வி.பி. இளைஞர் கூட்டமே. நாளை பண்டாரநாயக்க குடும்பமும், ஸ்ரீல.சு.கட்சியும் அரசொன்றை அமைக்க நேர்ந்தால், அந்த அரசை இயங்க வைக்கப் போவதும் இந்த ஜே.வி.பி.இளைஞர் கூட்டமே. அன்று அமெரிக்கா, பிரித்தானியா உட்பட்ட ஐரோப்பாவுக்கு மட்டுமல்ல உலக வங்கிக்கும், சர்வதேச நிதியத்துக்கும் இந்த இளைஞர் கூட்டத்துடன் தொடர்புவைத்துக்கொள்ள வேண்டி ஏற்பட்டது. இந்தியா இப்போது அவ்வகைத் தொடர்பை ஏற்படுத்தி வருகின்றது. விஜேவீர இருந்திருந்தால் அவரால் இதுபோன்ற விதத்தில் நடவடிக்கை மேற்கொண்டிருக்க முடியாது.

ஜே.வி.பியினர் போன்றே பொ.ஐ. முன்னணியிலிருந்து பிரிந்து வந்த கூட்டத்தினரும் இலேசுப்பட்டவர்கள் அல்லர். எல்லோருமே மிகத் திறமைமிக்கவர்கள் ஆனபோதிலும் இவர்கள பலவகைப் பின்னணி கொண்டவர்கள். வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த இவர்கள் வெவ்வேறு வகையான அரசியல் அடிப்படைகளுடன் ஒன்றிணைந்தவர்கள். எஸ்.பி.திஸாநாயக்க, கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேறி ஸ்ரீல.சு.கட்சியில் இணைந்ததன் மூலம் ஸ்ரீல.சு.கட்சியின் செயலாளர் பதவிவரை உயரும் அளவுக்குத் திறமைகொண்டவர். பந்துல குணவர்த்தன மக்கள் ஐக்கிய முன்னணியில் தனது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தவர். எஸ்.பி.திஸாநாயக்கா போன்றே பந்துல குணவர்த்தனவும் ஜே.வி.பியின் இளைஞர் அணி போன்றே தாழ்ந்த நிலையில் இருந்து வாழ்க்கையைத் தொடங்கி அரசியல பயணத்தில் நீண்ட தூரம் பிரயாணம் மேற்கொண்டவர்கள் ஆவர். இவர்கள சிங்களத்தில் அரசியலைப் போதித்து, சிங்களத்தில் அரசியல் நடத்த ஆரம்பித்தவர்கள். எஸ்.பியின் தகப்பனார் ஆசிரியத் தொழில் புரிந்தவர். பந்துலவும் ஆசிரியத் தொழில் மூலம அரசியலுக்குப் பாதை அமைத்துக் கொண்டவராவார். மகிந்த சமரசேகர ஜே.வி.பி. ஊடாக அரசியல் அரங்கில நுழைந்தவர். பல்கலைக்கழகத்தில் படித்த வேளையில் அரசியலில் ஈடுபாடு கொண்டு ஆயுதப் புரட்சியின் சுவையை அனுபவித்தவர். ஆயுத வழியிலிருந்து ஜனநாயக வழிக்கு மாறிக்கொண்டவர்.

விஜயகோனும் கிராம மட்டத்தில தமது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்த சிறிய மனிதர். இவர் களில் எவரும் ஐ.தே.கட்சியில் முன்னிலை வகிக்க இயலாது. ஐ.தே.கட்சியில் பேராசிரியர். ஜீ.எல்.பீரிஸுக்கு மட்டுமே முக்கிய இடம் அளிக்கப்படுகிறது. பெரும்பாலான ஐ.தே.கட்சித் தலைவர்கள் போன்றே பிரபுக்கள் குடும்பத்திலிருந்து அரசியலுக்கு வந்தவர் பேராசிரியர் பீரிஸ். அவரது தந்தையார் சேனநாயக்க குடும்பத்தின் ஐ.தே.கட்சியின் சொத்துப் போன்று கணிக்கப்பட்டவர். ஒரு சந்தர்ப்பத்தில் பேராசிரியர் பீரிஸின் தந்தையார் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பதவிக்குப் போட்டியிட வேட்பாளராகப் பிரேரிக்கப்பட்ட போது, அவ்வேளையில் ஐ.தே.கட்சி அரசின் பிரதமராக இருந்த டட்லி சேனநாயக்க, பீரிஸின் தந்தையாரை ஸ்ரீலங்கா உயர்ஸ்தானிகர் பதவியிலிருந்து விடு விக்க மறுத்தார். அவர் போன்ற திறமைசாலிகளின் சேவை நாட்டுக்கு மிக அவசியமானதென அதற்குக் காரணம் கூறினார் பிரதமர் டட்லி சேனநாயக்க. அவ்விதம் கணிக்கப்பட்ட ஜீ.எல்.பீரிஸின் தந்தையார் 1977ஆம் ஆண்டுப பொதுத் தேர்தலுக்காக ஜே.ஆர். நியமித்த தேர்தல் சபை அங்கத்தவர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டார். பேராசிரியர் பீரிஸ்கூட ஐ.தே.கட்சி அரசுடன் நெருக்கமாக இணைந்து செயலாற்றினார். சிறிமாவோ பண்டாரநாயக்காவும், சந்திரிகாவும் முயற்சிகளை மேற்கொள்வதற்கு முன்னராக முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவே பேராசிரியர் பீரிஸை பல்கலைக்கழகத்திலிருந்து வெளியே கொண்டுவந்து அரசியல் அரங்கில் அறிமுகப்படுத்திவைத்தார்.

அது இளைஞர் தொழில் வாய்ப்பு ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டதன் மூலம் நிகழ்ந்தது. இதனாலேயே தான் ஒரு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்காரன் அல்ல எனவும தனது பிறந்த வீடு ஐ.தே.கட்சியேயாகும் எனவும் பீரிஸ் குறிப்பிடுவதுண்டு. பொ.ஐ.முன்னணியிலிருந்து வெளியேறி வந்து ஐ.தே.கட்சிக்குள் இணைந்தவர்களில் பேராசிரியர் ஜீஎல்பீரிஸுக்கு மட்டுமே சிறந்த எதிர்காலம் உண்டு எனப் பொது மக்கள் பேசத் தலைப்பட்டமையும் இதனாலேயாகும்.



அதுபோன்றே இன்று நாம் அரசியல் நிலையைப் பார்க்குமிடத்து பொ.ஐ.முன்னணியிலிருந்து வெளியேறி வந்தவர்களாலேயே இன்றைய அரசு வழி நடத்தப்படுவதை உணர முடிகிறது. இன்று ஜீ.எல்.பீரிஸ் ஊடாகவே ஐ.தே.கட்சி அரசு சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றது. சந்திரிகா, ஐ.தே. கட்சி அரசு மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிப்பதன் மூலம் சந்திரிகாவின் பிரதிவாதி போன்று செயலாற்றுபவர் எஸ்.பி.திஸாநாயக்கவே. அரசின் சமாதான முயற்சிகள்

(8ஆம் பக்கம் பார்க்க)

# சார்ஜா போட்டிகளுக்கான அணியில் முரளிதரன், குமார் சங்ககார சேர்ப்பு

சார்ஜா சுற்றுப் போட்டிக்கான இலங்கை அணியில் முத்தையா முரளிதரன், குமார் சங்ககார ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சார்ஜா போட்டிகளுக்காக கடந்த 23ஆம் திகதி இலங்கை அணி தெரிவு செய்யப்பட்டது. இவ்வணியில் முரளிதரன், சங்ககார இவ்விருவரும் இடம் பெறவில்லை.

அதன்பின் தேர்வுக்குழுவுக்கு மேலும் 3 அங்கத்தவர்களை அமைச்சர் நியமித்தார். அரவிந்த டி சில்வா, லலித் களுபெரும, அஸ்லி டி சில்வா ஆகியோரே புதிதாக நியமிக்கப்பட்டனர். இந்நிலையில் கடந்த வெள்ளியன்று தேர்வுக்குழுவின் 5 உறுப்பினர்களும் இணைந்து இலங்கை அணி குறித்து மீண்டும் ஆராய்ந்தனர்.

தம்மால் போட்டியில் முழுமையாக பங்குபற்றமுடியும் என முரளிதரன் தேர்வுக் குழுவினருக்கு உறுதியளித்தார். அதையடுத்து அவர் அணியில் சேர்க்கப்பட்டார். ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டிருந்த திலான் சமரவீர வெளியேற்றப்பட்டார்.

இதேவேளை, குமார் சங்ககாரவுக்கு மீண்டும் அணியில் இடமளிக்கப்பட்டது. அவருக்குப் பதிலாக சகல துறை வீரர் ஹசந்த பெர்னாண்டோ வெளியேற்றப்பட்டுள்ளார்.

உலகக்கிண்ண அணியில் இடம் பெற்றிருந்த வீரர்களில் மஹேல ஜயவர்த்தன, ரஸல்ஆர்னோல்ட், புலஸ்தி குணரட்ன ஆகியோர் சார்ஜா சுற்றுலாவுக்குச் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரசன்ன குணவர்த்தன, மைக்கல் வன்டோர்ட், கௌஷல்ய லொக்கு ஆராச்சி ஆகியோர் முதல் தடவையாக ஒருநாள் போட்டிக்கான அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ-5)

## 'களு' மீண்டும் சேர்க்கப்படுவார்: அரவிந்த டி சில்வா உறுதி!

"ரொமேஷ் களுவிதாரன மீண்டும் இலங்கைக் கிரிக்கெட் அணியில் சேர்த்துக்கொள்ளப்படுவார். அவரது சேவையை இன்னும் மூன்று வருடங்களுக்கு இலங்கை அணி பெற்றுக் கொள்ளும்"

- இவ்வாறு புதிதாக நியமிக்கப் பட்டுள்ள இலங்கை தேர்வுக்குழு உறுப்பினர் அரவிந்த டி.சில்வா தெரிவித்தார்.

கிரிக்கெட் சபை கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த அரவிந்த டி.சில்வா மேலும் தெரிவித்ததாவது:-

சார்ஜா சுற்றுலாவுக்கான இலங்கை அணி இளையவர்களுக்கு வாய்ப்பளிக்கும் முகமாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது. அதில் களுவிதாரன இல்லை என்றவுடன் அவரை நாம் மறந்துவிட்டோம் எனக் கருதமுடியாது. அவரது



சேவையை நாம் இன்னும் நீண்ட காலத்திற்கு பெற்றுக்கொள்ளவுள்ளோம்.

சார்ஜா கிண்ணத்திற்கு பின் நடைபெறவுள்ள நியூஸிலாந்து அணியுடனான போட்டி மற்றும் ஏனைய போட்டிகளில் களுவிதாரனவை பயன் படுத்தவுள்ளோம். ஒரு சிரேஷ்ட விக்கெட் காப்பாளரும், ஒரு கனிஷ்ட விக்கெட் காப்பாளரையும் பயிற்றவேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

களுவிதாரனவை நாம் மறந்துவிடவில்லை என்பதைஅனைவரும் தெரிந்து கொள்ளவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சார்ஜா போட்டிகளுக்கான இலங்கை அணியில் ரொமேஸ் களுவிதாரன சேர்க்கப்படாமையை எதிர்த்து நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. (-5)

### திருத்தம்

கடந்த 30.03.2003 உதயனில் எட்டாம் பக்கத்தில் வெளியான திருமதி சின்னத்துரை பாறுவதி அவர்களின் நினைவஞ்சலி விளம்பரத்தில் -

'மருமகன் தர்மகுலசிங்கத்தின் இல்லம்' என்பது தவறுதலாக 'மருமகன் தவகுலசிங்கத்தின் இல்லம்' எனப் பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

# விளையாட்டு

## அந்ரே அகாஸி சாதனை!

அமெரிக்காவில் நடைபெற்ற நஸ்டக் 100 டென்னிஸ் சுற்றுப் போட்டியில் அந்ரே அகாஸி சம்பியனானார்.

மியாமி நகரில் நடைபெற்ற இத் தொடரின் இறுதிப்போட்டி ஞாயிறன்று நடந்தது. அமெரிக்காவின் அந்ரே அகாஸியும், ஸ்பெயின் வீரர் கார்லோஸ் மோயாவும் இப்போட்டியில் மோதினர்.

இப்போட்டியில் 6-3, 6-3 விகிதத்தில் அகாஸி வென்றார். இவ்வெற்றியின் மூலம் சுமார் 5 கோடி ரூபா பணப்பரிசையும் அகாஸி பெற்றுக் கொண்டார்.

4 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளுக்கு அடுத்ததாக மிகப்பெரிய டென்னிஸ் சுற்றுப்போட்டியாக நஸ்டக் - 100 சுற்றுப்போட்டி விளங்குகிறது. இச்சுற்றுப் போட்டியில் அகாஸி சம்பியனாகியமை இது 6 ஆவது தடவையாகும். தொடர்ச்சியாக 3 வருடங்கள் அவர் சம்பியனாகியுள்ளார். (-5)

## செரீனா மீண்டும் சம்பியன்

அமெரிக்காவில் நடைபெற்ற "நஸ்டக் 100" டென்னிஸ் சுற்றுப் போட்டியின் மகளிர் பிரிவில் செரீனா வில்லியம் சம்பியனானார். கடந்த வருடமும இவரே இப்போட்டியில் சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப்போட்டியில் அமெரிக்க வீராங்கனைகளான செரீன் வில்லியம்ஸும், ஜெனிபர் கெப்பிரியாட்டியும் மோதினர்.

இப்போட்டியில் 4-2, 6-4, 6-1 விகிதத்தில் செரீனா வென்றார்.

கடந்த 3 வருடங்களிலும் இறுதிப் போட்டியில் கெப்பிரியாட்டி தோல்வியுற்றிருந்தார்.

கடந்த சனிக்கிழமை அவரது 27 ஆவது பிறந்த தினம். தனது பிறந்தநாள் பரிசாக இம்முறை சம்பியன் பட்டத்தைப் பெறுவார் என எதிர் பார்க்கப்பட்டது.

முதல் 'செட்'டை அவர் வென்ற போதிலும், பின்னர் செரீனாவிடம் வீழ்ந்தார். செரீனா இவ்வருடம் தாம் விளையாடிய 3 சுற்றுப் போட்டிகளிலும் சம்பியன் பட்டம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)


## மாபெரும் மலிவு விற்பனை

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

01.04.2003முதல் - 13.04.2003வரை

சகல விதமான புடைவைகளை மிகக் கூடிய மலிவு விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

வளர்மதி புடைவை அகம்

(176) 258, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(16188)


## இரண்டாவது வருட நினைவலைகள்

மலர்வு 10 - 03 - 1930

உதிர்வு 25 - 03 - 2001



அமரர் ஸ்ரீமான் அருணாசலம் இராமையா

*(நாதஸ்வர வித்துவான்)*

திதி: பிரதமை 01.04.2003

ஈராண்டுகள் கழிந்து விட்டாலும் எங்களை
அன்பாகவும் பண்பாகவும் அரவணைத்து
சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்த எம்
அருமை அப்பாவே! உங்களை என்றும்
நாம் மறவோம்!

*ஆவரங்கால், 10 ஆம் கட்டை, புத்தூர்,* 0777 - 168509.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (16198)

## நெஞ்சுருகும் அஞ்சலி

சிதம்பரப்பிள்ளை முருகேசபிள்ளை

*(ஓய்வுபெற்ற கூ. அ. உதவி ஆணையாளர்)*

அவர்கள் எமது சங்கத்தின் ஆளணியை அங்கீகரிப்பதற்கு காட்டிய உறுதிப்பாடும் அக்கறையும் எம்மால் என்றும் நினைவு கூறக்கூடியதாகும். அன்னாரின் மறைவுக்கு எமது அஞ்சலியைச் செலுத்தி, அவர் தம் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்
கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்,கரவெட்டி.

*கரவெட்டி.* (C-27076)

## தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன்

தேவஸ்தான பரிபாலன சபை

தொல்புரம் – சுழிபுரம்

### காரியாலய உதவியாளர் பதவி (ஒன்று)

மேற்படி பதவிக்கு தேவஸ்தானத்திற்கு அருகில் உள்ள ஊர்களில் வதிவோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தெரிவுசெய்யப்படுபவர் எமது இந்து சமய முறைப்படி ஆசாரசீலராகவும், மூன்று நேரப் பூஜை வேளைகளிலும் தேவஸ்தானத்திற்கு சமுகமளித்து கடமையாற்றுவதுடன், காரியாலய நிர்வாக வேலை, கணக்குகள் பதிதல் போன்றவற்றிலும் அனுபவம் மிக்கவராகவும் இருத்தல்வேண்டும்.

நியாயமான வேதனம் வழங்கப்படும். இதனை நேர்முகப் பரீட்சையில் பேசித் தீர்மானித்துக்கொள்ளமுடியும்.

பொருத்தமானவர்கள் இவ்விளம்பரத் திகதியில் இருந்து 07 நாள்களுக்குள் தமது சுயவிவரக் கோவையுடன், கௌரவ செயலாளருக்கு தமது விண்ணப்பங்களை அனுப்புதல்வேண்டும்.

துரைசிங்கம் ரகு
கௌரவ செயலாளர்,
தேவஸ்தான பரிபாலன சபை.

தொல்புரம்,
சுழிபுரம். (16195)


## அறிவொளியில்

DIAS B.Sc. (Hons)
Spl. in Chem.
இன் இரசாயனவியல்
துரித மீட்டல் வினா - விடை
விரைவில் ஆரம்பம்.



## கெனன் ஷார்

போட்டோ கொப்பி மெஷின்கள்



உதிரிப்பாகங்கள்
மற்றும் பழுதுபார்த்தல்

- Drum
- Upper Roller
- Blades Lamp (220V/ 110V)
- Bushings
- Developer
- Conveyor Belts

டோனர் ரூ 600/= தொடக்கம்
உடன் பழுதுபார்ப்பு
சர்வீஸ் உத்தரவாதம்.

STARLIGHT ELECTRONICS

763, 2வது டிவிஷன்,
மருதானை வீதி, கொழும்பு-10.
Tel:693655, 681711. Fax :681712
E-mail:techaos@sltnet.lk
யாழ் பிரதேசத்திற்கு தொழில்நுட்ப நிபுணர் நேரடி விஜயம் செய்வார்


## கணக்காளர் தேவை

ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோவிலுக்கு, சைவ போசனமுள்ள, 40 வயதுடைய கணக்காளர் தேவை. ஆலய சுற்றாடலில் இருந்து 1km தூரத்திற்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது.

தொடர்பு:- நேரில் வரவும். (16206)

## மனதார வாழ்த்துகின்றோம்

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா இறுதித்தேர்வுப் பரீட்சையை நிறைவு செய்வதற்கு சகல வழிகளிலும் உதவி செய்த எமது சிரேஷ்ட விரிவுரையாளரும், இணைப்பாளருமாகிய திருமதி த.விலவநாதன் அவர்களுக்கும், தேசிய கல்வி நிறுவக உத்தியோகத்தர்களுக்கும், யாழ்.கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ப.விக்னேஸ்வரன் அவர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும், யாழ்.இந்துக் கல்லூரி நிலைய அதிபர், ஊழியர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம.

இறுதித்தேர்வு மாணவர்கள் (2000/2002)

*தேசிய கல்வி நிறுவக - இந்துக் கல்லூரி நிலையம்.* (16199)

## மனதார வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின்றோம்



நாவலம்பதி கிராம வளர்ச்சிக்காகப் பெரும் பங்காற்றியவரும அச்சுவேலி காட்டுமலைக் கந்தசுவாமி கோவில் இறைபணிகளில முன்னின்று உழைப்பவரும், வீரகேசரி செல்லத்துரை அவர்களின் புதல்வனுமாகிய

### திரு.செ.செல்வச்சந்திரன்

(கிராம உத்தியோகத்தர். உரும்பிராய் மேற்கு ஜே/263)

அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் I இற்கு பதவி உயர்வுபெற்றதை அறிந்து நாம் பெரும் மகிழ்வடைவதுடன், அதேவேளை அன்பரை மேலும் பற்பல பதவி உயர்வுகளைப் பெற்று உயர்ச்சியடைய எல்லாம் வல்ல காட்டுமலைக் கந்தன் நல்லாசிகள் புரியவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

சி.சீனியர்
(பாலசுப்பிரமணிய ஐயர் குடும்பத்தினர்),
நாவலம்பதி, அச்சுவேலி.

(16194)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



யாழ்.பல்கலைக்கழகத்தின் ஐந்தாவது உபவேந்தராக பொறுப்பேற்றுள்ள


### பேராசிரியர் சு.மோகனதாஸ்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது பதவிக் காலத்தில் யாழ்.பல்கலைக்கழகம் பல்வேறு உயர்வுகளை அடையவும், அத்துடன், இணைந்து தால மூலவள அபிவிருத்திக்கும், உழைக்கும் மக்களின் வாழ்வு உயர்வுக்கும் வழிகாட்டியாகச் சிறப்புடன் பணியாற்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

மக்கள் மறுமலர்ச்சிக்கழகம், தால மூலவள அபிவிருத்தி நிறுவனம், பருத்தித்துறை - புலோலி ஏற்றுமதி உற்பத்தி - கிராம கம்பெனி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனங்கள்.

(16192)


## யப்பான் சயிக்கிள்




- ஓட்டத்திற்கு இலகுவானவை.
- துருப்பிடிக்காதவை.
- பெல், பூட்டு, டைனமோ, கரியர் சகிதம் 3500/= இலிருந்து.
- உதிரிப்பாகங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

யப்பான் சயிக்கிள் விற்பனையில்
பல வருட அனுபவமுள்ளவர்கள்.

✪ சித்திவிநாயகர் யப்பான் சயிக்கிள் (B) பசார்
567, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.
*(மனோகராச் சந்திக்கு அருகில்)*

✪ அன்ரன் என்ரப்பிறைசஸ்
*111, சிலாபம் வீதி, நீர்கொழும்பு.*

(16197)



தந்தை செல்வாவின் 105 ஆவது பிறந்ததின நிகழ்வு நேற்று யாழ். கோட்டைப் பகுதியில் உள்ள செல்வா நினைவுச் சதுக்கத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோர் தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிப்பதையும் - நிகழ்வில் கலந்துகொண்டோர் தந்தை செல்வாவின் சமாதிக்கு மலரஞ்சலி செலுத்துவதனையும் படங்களில் காணலாம். (படங்கள்: வசந்தன்)

# உள்ளூர் தபாலகங்களுக்கு உதவுவது பொதுமக்களின் பிரதான கடமையாகும்!

## மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் தெரிவிப்பு

அச்சுவேலி,ஏப்.1

வசதிகளற்ற நிலையில் சேவையாற்றும் தபால் நிலையங்களுக்கு உரிய வள வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மக்கள் முன்வர வேண்டும்.

- இவ்வாறு கூறினார் யாழ்மாவட்ட அஞ்சல் அத்தியட்சகா எஸ்.சிவராசசிங்கம்.

அச்சுவேலி தபால் நிலைய ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்குரிய நியமனக் கடிதங்கள் வழங்கும நிகழ்வு தபால் நிலைய மண்டபத்தில் வண.பிதா கருணாரத்தினம் அடிகளார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மிகவும் நலிவடைந்த நிலையிலும மக்களுக்காகத் தொடர்ந்தும் சேவையாற்றிவரும் திணைக்களம் தபால் திணைக்களம் மட்டுமே. தபால் திணைக்களத்தின் செயற்பாடு தொடர்பான உண்மையான நிலைப்பாட்டினை மக்கள் புரிந்துகொள்வது அவசியம். 4ரூபா 50சதம் முத்திரை ஒட்டப்பட்ட ஒரு சாதாரண கடிதத்தை உரிய விலாசத்தவரிடம் சேர்ப்பிப்பதற்கான செலவாக தபால் திணைக்களத்திற்கு 16ரூபா 2சதம் ஏற்படுகின்றது.

இந்தவகையில், நாளாந்தம் நஷ்டமடையும் தபால் திணைக்களம் பெரியளவில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் திண்டாடுகின்றது.

தபால் நிலையங்களின் சேவை தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படவேண்டும் என்பதை வலியுறுத்தும் நோக்கில்தான் தபால் நிலையங்களில் ஆலோசனைக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.

மக்களின் நாளாந்த வாழ்க்கையுடன் இணைந்து செயற்படும் தபால் நிலையங்களின் வள வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மக்கள் முன்வர வேண்டும்.

அச்சுவேலி தபால் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைக்க காணி கிடைக்குமாயின் கட்டடத்தைக் கட்டுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்கும். இதற்கான முன் முயற்சிகள மேற்கொள்ளப்பட்டு வருவது வரவேற்கத்தக்கது - என்றார்.

(எ-11)

### இருதய நோயால் பாதிக்கப்பட்டவருக்கு உதவக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.1

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் எட்டாம் தரத்தில கல்வி கற்கும் செல்வி தர்மினி தவமோகன் இருதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி மாணவிக்கு அவசர சத்திர சிகிச்சை செய்வதற்கு ரூபா 4இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இம் மாணவியின் சத்திர சிகிச்சைக்கு உதவ விரும்புவோர் இலங்கை வங்கி, மானிப்பாய்க் கிளையில் 17496 இலக்க கணக்கில் நிதி உதவியை வைப்பில் இடலாம் என மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகச் செயலாளர் சி.கேசவராஜன் தெரிவித்துள்ளார்.

(ஓ-185)

# சிறையில் வாடும் சிந்தைக்கினியானுக்கு....

தென்னிலங்கைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவருக்கு அவரது நண்பர் எழுதிய கடிதம் இது.

## சிறைமுகவரிக்கு ஒரு கடிதம்

அன்பின் நண்பா!

சோகம் கொப்பளிக்க உன் அவல அனுபவங்களை கண்ணீர் கதையாய் வடித்து நீ அனுப்பிய மடல் கண்டேன். கண்களில் கண்ணீர் திரையிட மறு மடல் வரைகின்றேன். ஏன், உன் அனுபவங்களை எழுதச் சொல்லி உன் இதயத்தைப் போல என் உறவுகளின இதயங்களையும் இரத்தக் கண்ணீர் வடிக்க வைத்துவிட்டேன் என என மனம் வெதும்புகின்றது.

உண்ண ஒழுங்கான உணவு இல்லை என நீ எழுதியிருந்த போது நான் எங்கள் வீட்டு நாய்க்கு வைக்கும் உணவைத்தான் எண்ணிப் பார்த்தேன். நாங்கள் வீட்டில் சைவம் என்றாலும் அதற்கு மட்டும் அசைவம் தேடி சமைத்துக் கொடுக்கும் பொழுதுகளை மீட்டுப் பார்த்தேன். வாயில்லா ஐந்தறிவுப் பிராணி மீது நாம் காட்டும கரிசனை கூட ஆறறிவு மனிதன் மீது காட்ட முடியாத இவர்கள் என்ன ஐந்தறிவு ஜீவன்களா?

நண்பா! இந்த வேளையிலே பாடசாலை வாழ்விலே ஒரு நாள் நீ சொன்ன ஒரு கதை ஞாபகம் வருகின்றது. உலகில் மிகப்பெரிய சர்வாதிகாரியான ஹிட்லரிடம் அவரது நண்பர் ஒருவர் "உன்னுடைய வெற்றியின் இரகசியம் தான் என்ன?" என வினவினாராம். அதற்கு ஹிட்லர் "எனது படை வீரர்களின் விசுவாசம் தான். அதை நீயே வேண்டுமானால் பார்த்துக்கொள்" என்று கூறி ஒரு போர் வீரனை அழைத்தாராம். இந்த உரையாடல் நடுக்கடலில் ஒரு கப்பலின் தளத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. வந்த போர் வீரனைப் பார்த்து கடலிலே குதித்து விழும்படி கட்டளையிட்டாராம் ஹிட்லர். நீந்தத் தெரியாத அவனோ மறு பேச்சின்றியே கடலில் குதித்து உயிரை விட்டானாம். அடுத்த வீரனை அழைத்து அவ்வாறே சொல்ல அவனும் கடலிலே குதித்து உயிரை விட்டானாம். மூன்றாவது வீரனையும் அழைத்து அவனுக்கும் இதே கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இவ்வளவு நேரமும் பார்த்துக்கொண்டிருந்த ஹிட்லரின் நண்பர், போர் வீரனின் கையைப் பிடித்து "வேண்டாம் அவசரப்படாதே" எனத் தடுத்தாராம். அதற்கு அவன் சொன்னானாம் "அட விடுடா இவனோட இருக்கிறதை விட செத்துப்போய்விடலாம்" என்று. இந்தக் கதையை அன்று நீ சொன்னபோது வாய்விட்டுச் சிரித்தோம். இன்று அதுவே சிந்தனைக்குரியதாகவும் மாறிவிட்டது.

சிறையில் இவர்கள் தரும் 'உணவை' உண்பதைவிட விடுதலையை கோரிக்கையாக வைத்து உண்ணாவிரதம் இருந்து இறப்பது மேலானதுபோல் படுகிறது. ஆனால், என்ன செய்வது நண்பா! அஹிம்சையின் பெறுமதியை உணர்ந்த காந்தியதேசமே அன்று எம்மை வஞ்சித்தபோது சும்மா இருந்து சுதந்திரம் பெற்ற இவர்களிடம் எப்படி அஹிம்சைக்கான மதிப்பை எதிர்பார்ப்பது? நீங்கள் கேட்பதோ நீதி, நியாயம். ஆனால், அவர்களிடம் இருப்பதை நீங்கள் கேட்டால்தானே அவர்களால் அதைத்தர முடியும். இல்லாததைக் கேட்டு பலன் என்ன?

நண்பா, இங்கு நாளாந்தம் பத்திரிகையைப் பார்க்கும்போது ஓராண்டுக்கு முன் பரமவைரிகளாக இருந்தவர்கள நண்பர்களாகக் கைலாகு கொடுக்கும காட்சிகள் முற்பக்கத்திலேயே இடம் பிடித்திருக்கும். புலிகள் இங்கு உலாவித்திரியும் வேளையிலே அவர்களிற்கு உதவினீர்கள் எனும் சந்தேகத்தின் பேரில் பிடிபட்ட நீங்கள் நான்கு சுவர்களுக்கு மத்தியிலே நின்றுகொண்டு சிறைக்கம்பிகளை எண்ணிக் கொண்டிருப்பது இலங்கை அரசின் நிலைப்பாட்டை கேலிக்குரியதாக்கி விடுகிறது.

சட்டத்தைக் காரணங்காட்டி, மனித உரிமைகள் மீறப்பட்டு நீங்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறீர்கள். 'சட்டம் ஒரு சிலந்தி வலை போன்றது அதில் சிறிய பூச்சிகளே அகப்பட்டுக் கொள்கின்றன. பெரிய காண்டா மிருகங்கள தப்பிவிடுகின்றன' எனும் மேலைத்தேய அறிஞர் ஒருவரின் கருத்துத்தான் இப்பொழுது நினைவுக்கு வருகிறது.

சாப்பாட்டிற்கு தரும் சோற்றிலே கல்லென்று எழுதியிருந்தாய், அங்கு மட்டுமல்ல இங்கும் நிவாரணத்திற்கு தரும் அரிசியிலும் அதே நிலைதான். எங்கிருந்து அரிசியை இறக்குமதி செய்து எங்கு வைத்துக் கல்லைக் கலக்குகிறார்களோ தெரியாது.

நண்பா! இப்போது இங்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் குறிப்பிட்ட சில ஆலயங்களிலே உணவு உண்ண வழியின்றி தவிக்கும் ஏழை மக்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. அவர்களிற்கு வாரத்தில் ஒரு முறைதான் பசிக்கிறது என்பதை புரிந்து கொண்டது அரசியல்வாதி மட்டும் தான். வேறு யாருக்கும் இது புரியவில்லை நண்பா! உண்மையிலேயே இவர்கள் அரசியல் லாபம் கருதாத சேவை நோக்குக் கொண்டவர்களாக இருந்தால் - அரசுடன் பேசி உங்களின் விடிவைத்தான் பெற்றுத்தர முடியவில்லையாயினும் - நல்ல உணவைத்தானும் பெற்றுத் தரலாம் அல்லவா? ஆலயங்களிலே வாரம் ஒரு முறை பசிக்கும் ஜீவன்களிற்கு உணவு இடுவதைவிட நாளுக்கு மூன்று நேரம் பசிக்கும் உங்களிற்கு உணவிட்டால்தான் உண்மையாகவே இந்து சமயத்தின் நோக்கு நிறைவு பெறும். இது தமக்கு அப்பாற்பட்ட செயலென அவர்கள் கருதக்கூடும். பாடசாலைகளிற்கு ஓடி விளையாட ஓட்டோ வழங்குவதும் அப்பாற்பட்ட செயல்



அல்லவா? அது கல்வி அமைச்சுடன அல்லவா தொடர்பானது?

நண்பா! நீ விடுதலைபெற்று வெளியிலே வந்து எனது வைத்திய படிப்பிற்கு பரிசோதனை விலங்காக இருப்பாய் என நீ எழுதியபோது எனது இதயமே வெடித்துவிடும் போல இருந்தது. என்னைவிடக் கெட்டிக்காரனான நீ, இங்கு மருத்துவ பீடத்திலே இணைந்து சற்று சந்தேகங்களைத் தீர்க்கும் சகபாடியாக இருக்கவேண்டியவன். பேரினவாதிகளின் அராஜகத்தினால் இன்று ஒரு நோயாளியாக மாறிவிட்டாய் எனும்போது அழுவதைத் தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை.

உன்னைப் பிரிந்துள்ள கவலையை உனது தாயார் சற்றுநேரம் மறந்திருக்க வேண்டும் என்பதற்காக நீ இருந்தால் என்ன செய்வாயோ அதை நான் உனது தாய்க்குச் செய்வதுண்டு. அப்போது உனது அம்மா சொல்லுவா, "தம்பி, என்ர பிள்ளையை நான் போராட்ட உணர்வு ஏற்படாமல் பொத்தி பொத்தி வளர்த்தன் பார். கடைசியில என்ன நடந்தது? அப்பாவியான எனது பிள்ளையைப் பிடிச்சுக்கொண்டு போய் அடைச்சு சித்திரவதைப்படுத்திறாங்கள். இதைவிட, என்ர பிள்ளை உண்மையிலேயே போராடப் போயிருந்தால் நானும் ஒரு வீரத்தாய் என அமைதியடைவேன்" என்று கூறுவார் அதைக் கேட்கும் போது என்னால் உன் தாய்க்கு ஆறுதல் சொல்ல முடியாது போகும்.

நண்பா! அரசியல்வாதிகளை நம்பாதீர்கள்! அவர்கள் உங்கள் சோகத்தை தமது சுதந்திரத்துக்காக மூலதனம் இடுவார்கள். ஆறே இல்லாத ஊருக்குப் பாலம் கட்டித் தருவதாகக் கூறுவதுதான் அவர்களின் இயல்பு.

உங்கள் விடுதலையிலே உண்மையிலேயே எமது எம்.பிக்கள் அக்கறை உள்ளவர்களாக இருந்தால் உங்களது விடுதலையை பேரப்பொருளாக வைத்து தமது பதவியைத் தூக்கி எறிய முற்படட்டும் பார்க்கலாம். பதவி துறக்கக்கூட வேண்டாம். முற்படட்டும் போதும்.

இறுதியாக, நண்பா! நீ வெளியே வரும் நாளைப் பார்த்துக் காத்துள்ளேன். முற்றத்து நிலவொளியில் அம்மா குழைத்துத்தரும் சோற்றை உருட்டியபடியே கதைபல பேசக் காத்திருக்கின்றேன்.

என் காத்திருப்பு எது வரைக்கும் தொடரும்..? காலந்தான் பதில் சொல்ல வேண்டும்.

அன்பின் நண்பன் இ. இந்திரஜித்.

## வெல்டிங் வேலையாள்கள் தேவை

மின்சார வெல்டிங் வேலை தெரிந்தவர்கள் தேவை. வேலை நாள்களில் தொடர்புகொள்ளவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

K.V.S.ஹாட்வெயர்ஸ்

123, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(c/27068)

## உழவுக் கலப்பை விற்பனைக்கு

லான்மாஸ்ரருக்குரிய புதிய கலப்பை விற்பனைக்குண்டு.

தொடர்பு:

நா.சுகுணதாசன்,

விஷ்ணுஜா பந்தல் சேவை,

நாவலர் வீதி,

அரியாலை,

(16190)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கச்சாய் புங்கடிப் பிள்ளையார் ஆலய பிரதம அர்ச்சகர் -

### வீரபத்திர சர்மா ஐயா

அவர்கள் கடந்த பங்குனித்திங்கள் 13 ஆம் நாள் வியாழக்கிழமை குருப்பட்டாபிஷேகம் (ஆசார்யாபிஷேகம்) பெற்றமையை இட்டு ஐயா அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல குருப்பட்டங்களைப் பெற்று அவரது சேவை மேன்மேலும் தொடர எல்லாம் வல்ல புங்கடி விநாயகப் பெருமான் அருள்புரியப் பிரார்த்திக்கின்றோம்.

கச்சாய் புங்கடிப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபை.

(C-27069)


## துயர் பகிர்வு

கோப்பாய்ப் பிரதேச செயலகத்தில் மூன்று வருடங்களிற்கு மேலாக உதவி அரசாங்க அதிபராகக் கடமை புரிந்து 30.03.2003 அன்று அமரரான எமது முன்னாள் உதவி அரசாங்க அதிபர்

### சிதம்பரப்பிள்ளை முருகேசம்பிள்ளை ஐயா

அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதோடு, அமரரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*கோப்பாய்ப் பிரதேச செயலக நலன்புரிச் சங்கம்.* (C-27075)

கோப்பாய்ப் பிரதேச செயலரும், பிரதேச செயலக ஆளணியினரும்.


தேசிய முதல் தரக் கல்லூரி

அரச அங்கீகாரம் பெற்றது மற்றும் AICTE அனுமதி பெற்றது.

பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது

2nd Cross, Bhoopasandra, RMV 2nd Stage, Bangalore - 560094

TelNo: 0091-80-3414557,3417833, 3510988. Fax: 3615621, 3417832

Website: www.nfgcollege.com

E-mail: nfgc@bgl.vsnl.net.in, enquiry@nfgcollege.com

- B.Sc Biotechnology
- B.Sc Genetics
- B.Sc Microbiology
- B.Sc Computer Science
- B.C.A Computer Application
- B.B.M Business Management
- B.Com. + Computer

1. 2003 ஜீ.சீ.ஈ உயர்தரப்பரீட்சை முடிவுகளுக்கு காத்திருக்கும் மாணவர்கள் பதிவு செய்து ஒரு வருட விரயத்தை தவிர்த்துக் கொள்ளுங்கள்.
2. பட்டப்படிப்புக்கான தகைமை 12 ஆண்டு பரீட்சை சித்தி அல்லது அதற்கு சமமான பரீட்சைகளில் சித்தி.
3. அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களுடன் சகல வசதிகளுடனான ஆய்வு கூடங்கள்.
4. வாசிகசாலை வசதி மற்றும் ஆண்கள், பெண்களுக்கான தனித் தனி தங்குமிட விடுதிகள்.
5. 250 இலங்கை மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.
6. கல்லூரியில் 150 இலங்கை மாணவர்கள் கல்விபயின்று பெங்களூர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று அரசாங்க, தனியார் துறைகளில் தொழில் புரிகின்றனர். மற்றும்இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உயர் கல்வி கற்கின்றனர்.
7. மாணவர்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் வரவும்.
8. மாணவர்கள் 400 அமரிக்க டொலர்கள் அல்லது சமமான தொகையை செலுத்தி உடனடி அனுமதி பெறலாம்.
9. மேலதிக விபரங்களுக்கு கல்லூரி இணையத்தளத்தைப் பார்க்கவும்.

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்— திரு. ஏ.அ. குணவர்தன — 811524 இல்லம்

திரு. ஏ.சி. குணசேகர — 038 32657, 038 34154, 078 697512

இலவச கருத்தரங்கு காலை 9.30 மணிக்கு

நேர்முகப்பார்வையும் உடனடி அனுமதியும்

காலை 10.30 முதல் மாலை 5.00 மணிவரை

5 ஏப்ரல் 2003ல் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில்

Company Secretarial Services (Pvt) Ltd.

No: 285C-1/1, Stanley Tillakaratne Mw. Nugegoda.

Tel No: 01-854438 / 0777-387273

E-mail: yapadd@sol.lk


## காவலாளி தேவை

சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (தலைமைக் காரியாலயத்திற்கு) இரவு நேர காவலாளி (தற்காலிகம்) தேவை. விண்ணப்பிக்க விரும்புவர்கள் 08.04.2003ஆம் திகதிக்கு முன்னதாக தலைவர், சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், மின்சார நிலைய வீதி, சுன்னாகம் என்ற முகவரிக்கு நேரிலோ, அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கவும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.

வயது எல்லை - 25 - 45 வரை.

தலைவர்,

சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

மின்சார நிலைய வீதி, சுன்னாகம். (16193)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 1935 - 11 - 02



ஆண்டவன் அடியில் 2003 - 03 - 02

### திருமதி ஜெயலட்சுமி சீவரத்தினம்

02.03.2003 இல் இறைபதமடைந்த கிழக்குவளவு, மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயலட்சுமி சீவரத்தினம் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (01.04.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கிழக்குவளவு, மல்லாகம்.

T.P: 0777 - 177083

(c/27030)

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 28 - 09 - 1957



ஆண்டவன் அரவணைப்பில் 02 - 03 - 2003

### திருமதி துரைசிங்கம் மனோரமாதேவி

ஈரைந்து மாதம் எம்மை சுமந்தவளே !

எங்கு சென்றாய் எம்மை விட்டு.....?

அன்பின் பிறப்பிடமே ....அம்மா!

ஆறாத் துயரில் அழுகின்றோம் உங்கள் நினைவால்..

இன்று (01.04.2003) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.* (16189)

தகவல்:

மகன்

(மூர்த்தி வீடியோ அன் எலக்ரோனிக்ஸ்)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 10 - 05 - 1917



உதிர்வு 02 - 03 - 2003

### அமரர் கந்தர் சின்னத்தம்பி

நீ வளர்த்த சோலை இங்கு

நீர் கண்டும் வாடுதையா!

இதழ் உதிர்த்தி உன் பிரிவை

நீர் உருக பாடுதையா!

இன்று (01.04.2003) செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தியேட்டர் லேன், இணுவில். (16186)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

*சிவ விரதம் அனுஷ்டித்து சிவபதம் எய்திய எனது பாசமிகு சகோதரி*

## திருமதி மனோரமாதேவி



அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (01.04.2003) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு வதிரி, கரவெட்டியில் அமைந்துள்ள ஸ்ரீ பரமானந்த சிறுவர், முதியோர் இல்ல ஆச்சிரமத்தில் நடைபெற்று, தொடர்ந்து அன்னதானம் வழங்கும் வைபவம் நடைபெறும் என்பதை அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் அறியத்தருவதுடன், அதில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன். (16218)

தோற்றம் 28.03.1957 மறைவு 02.03.2003

தகவல்:
சகோதரி திருமதி விஜயேந்திரா பாஸ்கரன்
(ஆசிரியை, யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்)

*மூத்தவிநாயகர் கோயிலடி, ஆனைக்கோட்டை.*



ஓம் ஸ்ரீ சாயிராம்

### மாதாந்த ஆன்மீக சஞ்சிகை..சனாதனசாரதி இதழ்கள்...12

வைகாசி 2003 தொடக்கம் சித்திரை 2004 வரை, ருபா 320/=
(நடைமுறையில் இருக்கும் சந்தாவில் ருபா 15/= குறைக்கப்பட்டுள்ளது)

பூபாலசிங்கம் புத்தகசாலையின் உதவியுடன் இந்த விநியோகத்தைச் செய்கின்றோம். சந்தா பணத்தை 2003, சித்திரை மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு பொருளாளர், இணைப்புக்குழு, வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனம் என்று குறிப்பிட்டு, இலக்கம் 411/1, K.K.S.வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு, நேரடியாகவோ அல்லது சமீபத்திலுள்ள ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத் தலைவருடாகவோ அனுப்பிவைக்கலாம்.

இணைப்புக்குழு ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனம், வடபிராந்தியம். (16213)



### உயர்தர மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் நடத்தப்படும் க.பொ.த (உ/த) 2003 ஆம் ஆண்டு பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் புதன்கிழமை தென்மராட்சியில் இடம்பெறும்.

இடம்:- சாவகச்சேரி இந்துக் கல்லூரி
காலம்:- 02.04.2003 புதன்கிழமை
நேரம்:- காலை 9 மணி.

*யாழ்.பல்கலைக்கழகம்.* வணிக மாணவர் மன்றம். (16215)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னம்மா கோபாலன்

அரியாலை, நொத்தாரிஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா கோபாலன் நேற்று (31.03.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து கோபாலன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - நாகமுத்து தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் தில்லைநாயகம் (ஆயுர்வேத வைத்திய அதிகாரி - பிரதேச சபை, பூநகரி), பங்கசபவனம் (ஜேர்மனி), மனோன்மணி, ஞானேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான ஏரம்பு, வேலுப்பிள்ளை மற்றும் மாணிக்கம், முருகேசு (ஓய்வூதியர் - இலங்கை மின்சாரசபை), ஆறுமுகம் (ஓய்வூதியர் - இலங்கை மின்சாரசபை), தம்பையா (ஓய்வூதியர் - யாழ்.போதனா வைத்தியசாலை), தம்பிரத்தினம் (ஓய்வூதியர் - இலங்கை போக்குவரத்துச்சபை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிர்மலா, கனகேஸ்வரி (ஜேர்மனி), வீரசிங்கம் (காசாளர் - அரியாலை ப.நோ.கூ.அ.கூ.சங்கம்), கனகலிங்கம் (ஓய்வூதியர் - இலங்கை கடற்படை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் அன்னலட்சுமி, காலஞ்சென்ற சதாசிவம், பராசக்தி, சந்தனவடிவு, இராசமணி, மல்லிகா ஆகியோரின் மைத்துனியும் மற்றும் ஞானிதுஷாரா (எழுதுநர் - யாழ்.மாநகரசபை), ரோய் ஜூலியஸ், ஜெரிமில்டன், ஜெனிவரோனா, அனுஷியா (கொழும்பு), சதீஸ் (ஜேர்மனி), பிரசாத் (ஜேர்மனி), நவாஸ் (ஜேர்மனி), நிவாஸ் (ஜேர்மனி), அகிலன் (கனடா), பிரசன்னா (கூட்டுறவு சங்கங்களின் சமாசம்), சாய்தா, திருமதி கௌசல்யா, ஆதவன், சுஜேஸ்கா, லதிக்கா, நிரோஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2003) செவ்வாய்க்கிழமை "66, கலைமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்" இல் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப.3 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

(16214)

தகவல்:
ஏ.வீரசிங்கம் (மருமகன்)

## திருமதி பரமேஸ்வரி சீவரத்தினம்

யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பரமேஸ்வரி சீவரத்தினம் அவர்கள் நேற்று (31.03.2003) திங்கட்கிழமை இல.2, திணைக்கள விடுதி, ரெலிகொம் வீதி, திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இ.சீவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் சீ.சிவதரன் (பிரதம கணக்காளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம், ஷகி.மா.), சீ.பவானந்தன் (D.O.A. வரைபட கூட உதவியாளர்), திருமதி ஞானவதி ஞானேந்திரன் (U.K.), செல்வி ரூபவதி சீவரெத்தினம் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி மாலதி பவானந்தன் (எயார் லங்கா), எஸ்.ஞானேந்திரன் (பட்டயப் பொறியியலாளர் - U.K) ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்வன் கிரிதரன் பவானந்தன் (கொழும்பு இந்துக் கல்லூரி), செல்வி சுலக்ஷினி பவானந்தன் (கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.2, திணைக்கள விடுதி, ரெலிகொம் வீதி, திருகோணமலையில் உள்ள இல்லத்தில் 2003.04.02 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப.10.00 மணியளவில் திருகோணமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*இல.2, வீதி அபிவிருத்தி திணைக்கள விடுதி, ரெலிகொம் வீதி, திருகோணமலை.* (C/27081)

தகவல்:
சீ.சிவதரன்
(பிரதம கணக்காளர், வீதி அபிவிருத்தி திணைக்களம், திருகோணமலை.)

## பளை விவசாயிகளுக்கு 'லங்கா சேவா' வின் உதவிகள்

தென்மராட்சி,ஏப்.1

ஜேர்மன் மனிதாபிமான உதவித் திட்டத்தின் கீழ் லங்கா சேவா நிறுவனத்தினர் பளைப் பிரதேச விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களையும் விவசாய உள்ளீடுகளையும் வழங்கி வருகின்றனர்.

பச்சிலைப்பள்ளி புனர்வாழ்வு அபிவிருத்திக் கழகத்தினூடாக அண்மையில் கோவில் வயல், மாசார், தர்மக்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 180 விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

லங்கா சேவா நிறுவனத்தினர் ஏற்கனவே மேற்படி பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்கியமை குறிப்பிடத் தக்கது. (எ-117)

## வானில் வந்த கும்பல் மினித்தியேட்டருக்குள் புகுந்து தாக்குதல்!

யாழ்ப்பாணம்,ஏப்.1

மினித் தியேட்டரில் படம் பார்த்துக் கொண்டிருந்தவர்களை கும்பல் ஒன்று தாக்கிவிட்டு தலைமறைவாகியுள்ளது.

இந்தச் சம்பவம் மானிப்பாய் பிரதான வீதியில் சந்தைக்கு அருகே இடம்பெற்றுள்ளது.

வான் ஒன்றில் வந்த கும்பல் தியேட்டருக்குள் புகுந்து அங்கிருந்தவர்களை தாக்கிவிட்டுச் சென்ற இச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னிரவு 7.30 மணியளவில் இடம் பெற்றது. (ஒ-185)

## மட்டு. நேரடி ரயில் சேவை

மட்டக்களப்புக்கான நேரடி ரயில் சேவை எதிர்வரும் 12ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. தற்போது இச்சேவை கொழும்பிலிருந்து வாழைச்சேனை வரையே நடைபெற்றுவருகிறது.

மட்டக்களப்புக்கான ரயில் சேவை 1996ஆம் ஆண்டு நடந்த அசம்பாவிதங்களையடுத்த பொலன்றுவையுடன் நிறுத்தப்பட்டது. அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் வாழைச்சேனைவரை நீடிக்கப்பட்டது.

## தம்பகாமம் கிராமம் புனரமைப்புக்குத் தெரிவு

தென்மராட்சி,ஏப்.1

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் பளைப் பிரதேசத்தில் உள்ள தம்பகாமம் கிராமத்தினைப் புனரமைப்பதற்கென தெரிவுசெய்துள்ளனர்.

முதற்கட்டமாக இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் இக்கிராமத்தில் உள்ள வீதிகள், பொதுக் கிணறுகள், மலசலகூடங்கள், முன்பள்ளி ஆகியவை புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

'சிரான்' வேலைத்திட்டத்தின் கீழ் இக்கிராமம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## பளையில் மூன்று தினங்கள் கலாசார விழா

தென்மராட்சி,ஏப்.1

பளைப் பிரதேச கலாசாரப் பிரிவின கலாசார விழா எதிர்வரும் 21ஆம் திகதி முதல் மூன்று தினங்களுக்கு பளையில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் சுடர்நிதிசிகாமணி தெரிவித்துள்ளார்.

இவ்விழாவில் பிரதேச கலைஞர்களின் இயல், இசை, நாடகம் ஆகிய நிகழ்வுகள் நடைபெறுமென்றும் அவர் கூறினார்.

கடந்த 1996ஆம் ஆண்டு தொடக்கம் பிரதேசத்தில் வருடாந்தம் கலாசார விழா நடத்தப்பட்டு, பிரதேச கலைஞர்களுக்கு ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது. (எ-117)


ராஜா யாழ்ப்பாணம்
இன்று முதல்
விஜய், ரீமாசென், வடிவேல்
பகவதி
10.30, 2.30, 6.30
நாளைமுதல் ரோஜாக்கூட்டம்

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், ஸ்னேகா, ரகுவரன் நடித்த
வசீகரா
RUSH HOUR


# மரண அறிவித்தல்கள்

## சோமசுந்தரம் குலேந்திரன்

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் குலேந்திரன் (முன்னாள் இலங்கைப் போக்குவரத்துச் சபை கணக்காய்வாளர்) நேற்று (31.03.2003) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சோமசுந்தரம் - பொன்னம்மா அவர்களின் மகனும் காலஞ்சென்ற சின்னையா - அன்னம்மாவின் மருமகனும் கௌரி (கனடா), பாலேந்திரன் (பின்லண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பாலசுந்தரம், காலஞ்சென்ற வைத்திலிங்கம் (C.T.B பரிசோதகர்), காலஞ்சென்ற வாலாம்பிகை (பேபி) மற்றும் அம்பிகை ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் பரமலிங்கம், கமலாம்பிகை காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் கனகரத்தினம், சரவணபவான், பங்கயவல்லி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரவீந்திரன் (கனடா), வசந்தி பிரகலாதன், வாசுகி ஸ்ரீஸ்கந்தன், சாந்தினி, ஸ்ரீலவன், ரஞ்சினி ரவீந்திரன், வசந்தா, சிவசூரி, சிவகரன், கீதாஞ்சலி, சங்கீதா, சுதாகர், சனாதனன் ஆகியோரின் மாமனாரும் விஜயபாஸ்கரன், ஞானவாணி ஆகியோரின் பெரிய தந்தையும் புஸ்பராணி, பத்மநாதன், ஈஸ்வரி தனபாலசிங்கம், கலாநிதி சிவானந்தன் ஆகியோரின் சிறிய தந்தையும் காலஞ்சென்ற நடராஜா (ஆசிரியர்), இராஜேஸ்வரி, தவமணி தேவி ஆகியோரின் சகலனும் ஜதீசன், மேகனன், பிரவீனன், ஜானுலக்ஷிகன், துலக்ஷிகா, யாதவன், யதுகுலன், ஜசங்கரன், சேஷன், சேஷகி, லக்சுமி, அகிலாண்டேஸ்வரி, அனுசன், சரவணன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் தெற்கு, இணுவில்.* (C/27082)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## திருமதி மகேசு பரமேஸ்வரி

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி மகேசு பரமேஸ்வரி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமியின் மகளும் சதாசிவம் மகேசு (ஓய்வு பெற்ற உப அதிபர், கொழும்புத்துறை ம.ம.வித்தியாலயம்) வின் அன்பு மனைவியும் பத்மராணி (பிரான்ஸ்), சிவக்குமார் (இத்தாலி), தர்மராஜா (இத்தாலி), சுந்தரராஜா (U.K.), தவராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும் V.T.இளங்கோவன், வதனி, சுகந்தி, தேவகி, சூரியபாலன் ஆகியோரின் மாமியாரும் அனேகா, அம்சா, ஒலியா, ஏகன், சந்தோஷா, சாரகா, சிவானி, சீரோன், சியாரா, சுகந்தன், கஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2003) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

*வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டை.* (16217)

தகவல்:
ம.தர்மராஜா (மகன்)

## துரையப்பா தவராசா

*(உரிமையாளர், எரிபொருள் நிரப்பு நிலையம், உரும்பிராய்)*

உடுவில் தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா தவராசா அவர்கள் நேற்று (31.03.2003) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் துரையப்பா - தங்கரத்தினத்தின் அன்பு மகனும் அம்பலவாணர் - சிதம்பரநாச்சியாரின் பாசமிகு மருமகனும் உருத்திரநாயகியின் அன்புக் கணவரும் ராதிகா (ஜேர்மனி), சயிலகா, கவிதா (மாணவி, மா.மெ.ஆ.பா.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிர்மலனின் (ஜேர்மனி) அன்பு மாமனாரும் செல்லம்மா, காலஞ்சென்ற அன்னலட்சுமி, மற்றும் ஜெகசோதி (கனடா), பத்மாவதி, அரசரத்தினம், யோகராசா (கனடா), புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2003) செவ்வாய்க்கிழமை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.* (16205)

தகவல்:
மனைவி,பிள்ளைகள்.

## தர்மலிங்கம் இரத்தினராசா

புங்குடுதீவு, 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் இரத்தினராசா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - யோகம்மா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - முத்துப்பிள்ளையன் தம்பதியினரின் மருமகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் ஹரிகரனின் (கனடா) அன்புத் தந்தையும் கமலாதேவி (கனடா), செல்வராசா (கனடா), பஞ்சலிங்கம் (கனடா), சின்னமணி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற கனகம்மா, தங்கம்மா (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் வரதலெட்சுமி, பேரின்பநாதன் ஆகியோரின் சிறியதந்தையாரும் ஆவார்.

அன்னரது பூதவுடல் இன்று (01.04.2003) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பிற்பகல் 3 மணியளவில் கேரதீவு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

*5ஆம் வட்டாரம், புங்குடுதீவு.* (16208)

தகவல்:
திருமதி இராசம்மா
(மனைவி)

## திருமதி தங்கமணி சுப்பிரமணியம் (ராசு)

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கமணி சுப்பிரமணியம் நேற்று (31.03.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (மானிப்பாய்) அவர்களின் அன்பு மனைவியும் சின்னம்மா (கனடா), தம்பிஐயா (கனடா), காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் புனிதரத்தினம்(கிளி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2003) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இளங்காடு இந்து மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.* (16216)

தகவல்:
கந்தையா புனிதரத்தினம்
(கிளி)

# சட்டவிரோதமாக படகில் திரும்பிய 18 பேர் பேசாலைக் கடலில் கைது!

தமிழ் நாட்டிலிருந்து சட்டவிரோதமாக பேசாலைக்கு வந்து கொண்டிருந்த இலங்கை அகதிகள் தலைமன்னார் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 9பேர் ஆண்கள் ஏனையோர் பெண்கள். வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இவர்கள் சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்னர் அகதிகளாகத் தமிழ்நாட்டுக்குச் சென்றிருந்தனர். என விசாரணைகளில் தெரிய வந்திருக்கிறது.

இவர்கள் அனைவரும் படகொன்றின் மூலம் பேசாலையை நோக்கி வந்துகொண்டிருந்தபோது நேற்றுமுன்தினம் மாலை பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று இவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவிருந்தனர். (ம)

## யார் ஆட்சிபீடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜதந்திரிகளைச் சந்தித்து, தனது கருத்துக்களை வெளியிடும் வழமையான நடவடிக்கையை கடந்த ஒரு வருடமாக ஜனாதிபதி மேற்கொள்ளவில்லை. அந்தச் செயற்பாடு தற்போது மீள ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அந்த வரிசையில் முதலாவது கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்த நடைமுறை மீள ஆரம்பிக்கப்பட்டிருப்பதை இராஜதந்திரிகள் வரவேற்றிருப்பதாக ஜனாதிபதி செயலக செய்திக்குறிப்பு தெரிவித்தது. நேற்றைய கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக அந்தச் செய்திக் குறிப்பில் வெளியிடப்பட்ட தகவல்கள் வருமாறு:-

எந்த அணியுடன் சேர்ந்து யார் ஆட்சிக்கு வந்தாலும் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் பேணப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அதனை மதிக்கத் தவறியதே எமது இன்றைய சீரழிவுக்கு காரணம்.

கல்வி, வேலைவாய்ப்பு பதவியுயர்வு போன்ற விடயங்களில் இதனை மதிக்கத் தவறும் அதிகாரிகள் தண்டிககப்பட வேண்டும்.

வடக்கு, கிழக்கு புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு வேண்டிய உதவிகளை வழங்க உதவும் நாடுகள் சமூகம் முன்வந்துள்ளது.

பாராட்டத்தக்க இந்த நடவடிக்கையை ஊக்குவிக்கும் அதேசமயம் சட்டத்தின் கீழ் எங்கள் மக்கள் அனைவருக்கும் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் பாதுக்காக்கப்படுவதற்கு தங்களின் முழுச் செல்வாக்கைப் பயன்படுத்தும்படி இந்தச் சமாதான நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகிக்கும் இந்த நாடுகளைக் கேட்டுக்கொள்கின்றோம்.

சமாதான நடவடிக்கைகளில் எனக்குள்ள உறுதிப்பாட்டை மீண்டும் ஒரு தடவை வெளிப்படுத்த விரும்புகின்றேன் எனது பாதையில் இடையூறுகளும் தடைகளும் விதிக்கப்பட்டாலும் கூட 1994 இல் நான் ஆரம்பித்த சமாதான முயற்சிகள் தொடரப்பட வேண்டும் என்பதில் நான் மிகமிக உறுதியாக இருக்கிறேன்.

கடந்த 2 தசாப்த காலமாக நீடிக்கும் ஆயுத பிணக்குக்கு பேச்சு மூலம் அமைத்தித் தீர்வு ஒன்றைக் காண்பதே 'சமாதான நடவடிக்கைகள்' என்பதன் அர்த்தம். அதுபோல் இலக்கை அடையும் நோக்கத்தைக் கொண்டது. எங்கள் சமூகங்கள் அனைத்தினதும் சட்டபூவமான அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதன் மூலமே அதனை எட்ட முடியும்

தற்போதைய அரசியல் சக வாழ்வு சிக்கலுக்குள்ளாகியிருப்பது அத்தகைய செயற்பாட்டுக்கான சட்டங்களும் வழிகாட்டல்களும் தெளிவாக வரையறை செய்யப்படாத காரணத்தினால்தான்.

எனது பக்கத்தில் எனது பொறுப்பை நான் சரிவர நிறைவேற்றியுள்ளேன். ஆனால், அரசுத் தரப்பு அதனைச் செய்யவில்லை. நாட்டின் நலன் கருதியும் சமாதான முயற்சிகளை குழப்பக் கூடாது என்பதற்காகவும் நான் எனது அதிகாரங்களைச் செயற்படுத்துவதில அதிக கட்டுப்படுத்தல்களைப் பின்பற்றி வந்துள்ளேன்.

அதிகாரப் பரவல் மூலம் இனப்பூசலைத் தீர்ப்பதற்கு நானும் எனது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும் எடுத்த நடவடிக்கைத் திட்டத்தை அப்போது எதிர்த்த ஐ.தே.கட்சி இப்போது தனது அரசில் அந்த வழியைத் தான் நாடியிருக்கின்றது. இதற்காக 2000 ஆம் ஆண்டு ஒகஸ்டில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அரசமைப்புத்திட்ட வரைபை சபைக்குள் கிழித்தெறிந்த அப்போதைய எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி, ஜனாதிபதியான என்னை கீழ்த்தரமாக கேவலப்படுத்தி ஏசியும் இருந்தது - என்றார் ஜனாதிபதி. (ம)

> உதயன் வாசகர்களே! இன்று ஏப்ரல் முதலாம் திகதி முட்டாள்கள் தினம். உங்களை யாராவது ஏமாற்ற முயலக்கூடும். அத்தகைய ஒரு முயற்சியை உங்களுக்கு மிக நெருங்கியவனான உதயனும் செய்ய முற்பட்டுள்ளான். 'வீரப்பனும் எழு சகாக்களும்...' என்ற தலைப்பிலான செய்தி அதிலொன்று.

## பாலா - பீரிஸ் 21ஆம் திகதி லண்டனில் சந்திப்பு

கொழும்பு,ஏப்.1

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் அமைசசர் ஜி.எல்.பீரிஸும் எதிர்வரும் 21ஆம் திகதி லண்டனில் சந்தித்து பேசவுள்ளனர்.

கண்காணிப்புக் குழுவினரின் அதிகாரங்கள் அதிகரிப்பது தொடர்பாக ஜப்பான் பேச்சுக்களில் ஏற்பட்ட இணக்கம் குறித்து பேசுவதற்காகவே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாகக் கூறப்பட்டது. (ம-4)

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது. இதனால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மோசமான குழப்ப நிலை உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

இரண்டு முக்கிய - பெருமைமிக்க பாடசாலைகள், யாழ்.பொது நூலகம், துரையப்பா விளையாட்டரங்கு, புதிதாக அமையவிருக்கும் நீதிமன்றக் கட்டடத்தொகுதி ஆகியவற்றுக்கு நெருக்கமாக - யாழ்.பழைய நகரப் பகுதியில் - இந்த முகாமை அமைக்க மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகள் மற்றும பிரமாண்டான நடவடிக்கைகளால் யாழ்ப்பாணத்திலுள்ள பொது அமைப்புகள் மற்றும் அரசியல் நிறுவனங்கள் கவலையும் எச்சரிக்கையும் அடைந்துள்ளன.

சுபாஸ் மற்றும் ஞானம்ஸ் ஹோட்டல்களில் இருந்து வெளியேற இராணுவம் எடுத்துள்ள முடிவை நாம் வரவேற்கின்ற அதேசமயம், யாழ்.மாநகர சபைப் பிரதேசத்தில் பெரும் நிலப் பகுதியை ஆக்கிரமித்து நகரின் மத்தியில் பிரமாண்டமான இராணுவத் தளத்தை அமைப்பதை நாம் முற்றாக எதிர்க்கின் றோம்.

ஹக்கோனி பேச்சுக்களில் எமது பிரதிநிதிகள் குழு இது விடயத்தில் முழு அதிருப்தியைத் தெரிவித்ததோடு, மாபெரும் மக்கள் எதிப்புப் போராட்டம குறித்தும் அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தது.

உங்கள் முடிவை மறுபரிசீலனை செய்யும்படியும் யாழ்.மாநகர சபை சுற்றாடலுக்கு வெளியில் மாற்று இடத்தை புலிகளுடன் ஆலோசித்து தீர்மானிக்கும்படியும் யாழ்மக்களின் சார்பில் வேண்டுகின்றோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## துருப்பினரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், இத்தாக்குதலை புலிகள் நடத்தினர் என்பதை அடியோடு மறுத்துவிடவும் முடியாது என வேறு பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

"கப்பலை நோக்கிவந்த நான்கு படகுகளில் ஒன்றிலிருந்து வேட்டுகள் தீர்க்கப்பட்டன. நாங்கள் திருப்பித் தாக்கியதில் அந்தப் படகுகளில் ஒன்று மூழ்கடிக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுகின்றோம்" - இப்படி கடற்படை தங்களுக்குத் தகவல் தெரிவித்ததாக கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

"இச்சம்பவம் குறித்து கிளிநொச்சியில் புலிகளின் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு தகவல் தெரிவித்தோம். இப்படியொரு சம்பவம் இடம்பெற்றது குறித்து அவர் ஆச்சரியம் தெரிவித்தார்கள்" - என்றும் அந்தக் கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் குறிப்பிட்டன. (ம)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல் அழிக்கப்பட்ட பின்னரும்கூட புலிகள் சமாதானப் பேச்சில் பங்குபற்றி வருவதன் மூலம் அவர்கள் சமாதான முயற்சியைக் குழப்ப முயற்சிக்க வில்லை என்பது தெளிவாகின்றது. போர்நிறுத்த ஒப்பந்தம் ஒரு வருடத்துக்கு கூடுதலான காலம் நடைமுறையிலிருப்பதோடு, சமாதானத்துக்கு மிக நெருக்கமாக இருக்கும் இவ்வேளையில் நிரந்தர சமாதானத்துக்காக சகல கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் - இவ்வாறு அவர் கூறினார்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் பகுதிக்கு மின் விநியோகத்தை நேற்று அமைச்சர்களான கருஜயசூரிய, காமினிலொக்குகே, பி.தயாரட்ண ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். இவர்களை விடுதலைப் புலிகளின் மட்டு.-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி த. ரமேஷ் உட்பட போராளிகள் அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம்.

# வைகோவின் புலி ஆதரவுப் பேச்சு பயங்கரவாதசெயல் கிடையாது!

## இந்திய அரசின் புதிய மனுவில் தெரிவிப்பு

புதுடில்லி,ஏப்.1

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக ம.தி.மு.க. தலைவர் வைகோ மீது பொடா சட்டத்தின் கீழ தமிழக அரசு எடுத்த நடவடிக்கை சரியே என்று உச்ச நீதிமன்றத்தில் சனிக்கிழமை மனு தாக்கல் செய்த மத்திய அரசு, அது தவறான விளக்கம என்று கூறி புதிய விளக்கத்தை நேற்றுத் தாக்கல் செய்தது.

'பொடா' சட்டத்தின்படி குற்றமாகக் கருதப்படும் அளவுக்கு பொதுக் கூட்டத்தில் வைகோ எதையும் பேசவில்லை என்று புதிய மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைகோவுக்கு எதிராக மனு தாக்கல் செய்யப்பட்டதற்கு பொடா சட்டத்தில் தவறு ஏதும் இல்லை. ஆனால், வைகோ மீது அச்சட்டப்படி தமிழக அரசு எடுத்த நடவடிக்கை தேவையற்றது என்று உச்ச நீதிமன்றத்தில் தெரிவிக்குமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது; அது தவறுதலாகப் புரிந்து கொள்ளப்பட்டுவிட்டதே காரணம் என்று அதிகாரி ஒருவர் விளக்கமளித்தார்.

கடந்த ஆண்டு ஜுலை 11ஆம் திகதி வைகோ கைதுசெய்யப்பட்டார். அது முதல் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். தான் கைது செய்யப்பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வைகோமனு தாக்கல் செய்திருக்கிறார். அதில் அரசியல் சட்டத்தின் 19 ஆவது பிரிவு வழங்கியுள்ள பேச்சுரிமைக்கு முரணாக, பொடா சட்டத்தின் பிரிவு இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

வைகோவின் மனு மீதான விசாரணை இன்று நடைபெறவிருக்கின்றது. (ம)

## கட்டுத்துவக்கு வெடித்து குடும்பப்பெண் பலி!

யாழ்ப்பாணம்,ஏப்.1

கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்ததில் குடும்பப்பெண் ஒருவர் உயிரிழந்தார்.

கரடியனாறு என்ற இடத்தில் நேற்று இரவு நடந்த இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஆர்.சரஸ்வதி (வயது43) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

வயிற்றில் படுகாயமடைந்தநிலையில் நேற்றிரவு 10 மணியளவில் அம்புலன்ஸ் மூலம் யாழ்போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டார். தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட இவர் சில மணிநேரங்களின் பின்னர் சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்தார். (ம-4)

## ஆனந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான் என்பதைத் தன்னால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என அண்மையில் கூட்டணியின் யாழ்.அலுவலகத்தில் நடந்த கலந்துரையாடல் ஒன்றில் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி கூறியிருந்தமை தெரிந்ததே. (ம-3-4)


BIT
Bachelor of Information Technology
University of Colombo School of Computing

கொழும்பு பல்கலைக்கழகத்தின் மேற்படி தகவல் தொழில்நுட்பமானி பட்டக்கல்விக்கான கல்வியாண்டு 2003/2004 இற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்ப முடிவு திகதி - 20.04.2003
IIS தலைமையகத்தில் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

BIT பட்டப்படிப்புக்கு வடக்கு, கிழக்கிலேயே அதிகளவு மாணவர்கள் கல்வி கற்பதும், பரீட்சைகளில் சித்தியடைவதும் IIS நிறுவனத்திலேயே என்பது யாவரும் அறிந்ததே.

"IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"

INSTITUTE OF INFORMATICS STUDIES
No. 100, Clock Tower Road, Jaffna
Tel : 21 222 2831
(16201)



புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

இடம் :- புதிய உயர் கல்லூரி புத்தகசாலை
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

காலம் :- 31.03.2003 - 05.04.2003
(காலை 8 மணி – 5 மணிவரை)

குறிப்பு:- இந்தியப் பல்கலைக்கழக வெளியீடுகள், அறிவியற் களஞ்சியம், வாழ்வியற் களஞ்சியம் என்பவற்றோடு பல்துறை சார்ந்த நூல்கள் விஷேட கழிவுகளுடன் மாணவர்களுக்கு வழங்கப்படும்.
(16169)



LOGIC
இறுதிப் பரீட்சை
ஏப்ரல் 4, 5ஆம் திகதி
8 a.m - 11 a.m
★ BRIGHTMAN
★ மதுபாரத்
வெளிமாணவரும் பரீட்சைக்கு தோற்றலாம்.
By : P.கமல் (16122)



வீடு விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் விக்டோறியா வீதியில் (இல.53) சுபாஸ் ஹோட்டலுக்கு அருகில் 5 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு
(வீடு தற்சமயம் இராணுவப் பாவனையில் உள்ளது) உரிமையாளர் உடனடியாக சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு உட்படுத்தப்படவேண்டிய நிலையில் உள்ளதால் அவசரமாக விற்கப்பட வேண்டியுள்ளது. விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி.

திருமதி R.சரவணமுத்து
37/1, பெரேரா லேன், கொழும்பு - 6 தொ.பே.எண் - 505602



IMS
Institute of Micro Systems
Market Lane, Manipay.

கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பம் 05.04.2003
★ பாடசாலை மாணவர்கள்.
★ அலுவலக உத்தியோகத்தர்கள்.
★ கணனிசார் தொழில் புரிவோர்கள்.
போன்றவர்களுக்காக ஒழுங்கமைக்கப்பட்ட விசேட கணனி வகுப்புகள்
காலை 6.00 மணிமுதல் மாலை 8.00 மணிவரை நடைபெறும்.

விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கும் இடங்கள்:
✦ IMS கல்வி நிறுவனம்.
✦ அபிநயா மல்ரி எலக்ரோனிக்ஸ் ~ மானிப்பாய்.
✦ காயத்திரி பன்சி ஹவுஸ் ~ மானிப்பாய்.
✦ விநாயகர் ஸ்ரோர் ~ ஆனைக்கோட்டை. (12204)

IMS. Institute of Micro Systems
Market Lane, Manipay.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.